Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 16 புதன்கிழமை (29.01.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 120

## குழந்தைகளை கிணற்றில்போட முயற்சித்த தாய் கைது

பண்டத்தரிப்பு பனிப்புலம் பகுதியில் தனது இரண்டு குழந்தைகளையும் கிணற்றிற்குள் போட முனைந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண்ணை யாழ். பெண்கள் சிறுவர் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி இடத்தினைச் சேர்ந்த பூபாலசிங்கம் தனுசியா என்ற மேற்படி பெண் கடந்த 20ஆம் திகதி தனது இரண்டு குழந்தைகளையும் அடித்து துன்புறுத்தி விட்டு கிணற்றில் போடுவதற்கு முயன்றுள்ளார்.

இதனை அவதானித்த அயலவர்கள் அதனைத் தடுத்து நிறுத்தியதுடன், குறித்த பெண் தொடர்பான விடயத்தினை கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து அவர் இது குறித்து இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

பொலிஸார் மேற்படி பெண்ணினை 19 ஆம் பக்கம் பார்க்க

## இதுவரை 53 எலும்புக்கூடுகள் மன்னார் புதைகுழியில் மீட்பு



### இன்றும் தொடர்கிறது அகழ்வு

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி மீண்டும் நேற்று மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் முன்னிலையில் 16ஆவது தடவையாகத் தோண்டப்பட்டுள்ளது. காலை 8.30 மணி முதல் மதியம் 2 மணிவரை மனிதப் புதைகுழி தோண்டப்பட்டபோது, மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இதுவரை மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 53ஆக அதிகரித்துள்ளன.

அநுராதபுர சட்ட 19 ஆம் பக்கம் பார்க்க

# மினி இராணுவ முகாம்களுக்கு யாழ். குடாவில் மூடுவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவ மினி முகாம்கள் பலவும் காவல் அரண்கள் பலவும் படிப்படியாக அகற்றப்பட்டுவருகின்றன.

அண்மைய வாரங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த படைவிலகல் நடவடிக்கை நேற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

நேற்று அதிகாலை மத்திகை சந்தியில் காணப்பட்ட படை முகாம் முற்றாக அகற்றப்பட்டது. அதை விட வடமராட்சியில் காணப்பட்ட சிறிய காவல் அரண்கள் பலவும் அகற்றப்பட்டிருக்கின்றன.

அதேவேளை வலிகாமம் பகுதியில் உள்ள பல மினி இராணுவ முகாம்களும் கடந்த சில நாட்களில் முற்றாக அகற்றப்பட்டிருக்கிறது. கொக்குவில் சந்தி, கட்டுடைச் சந்தி, இளவாலை ஆகிய பகுதிகளில் காணப்பட்ட சிறிய படைமுகாம்களும் அகற்றப்பட்டிருக்கின்றது. அதேவேளை கடந்த ஒரு மாத இடைவெளியில் வலி. வடக்கு உட்பட குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள தனியாருக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேறியுள்ளனர். அதுமட்டுமன்றி படையினர் வசமிருந்த வெற்றுக்காணிகள் பலவும் பொதுமக்களிடம் மீளளிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை படையினரது சிறு குழுக்கள் தமது ரோந்து நடவடிக்கைகளை வழமையைவிட அதிகரித்துள்ளனர்.

(48,109)

## அமெரிக்க அனுசரணையில் தீர்மானம் இனநல்லிணக்கத்துக்கே முக்கியத்துவம்

### வெளியாகியது உத்தியோக பூர்வ அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பதனை அமெரிக்கா நேற்று உறுதி செய்துள்ளது. எதிர வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்றை நிறைவேற்ற அமெரிக்கா அனுசரணை வழங்கும் என்பதனை அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும், யுத்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக சர்வதேச ரீதியான விசாரணைகளை வலியுறுத்தியா இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பது பற்றிய தகவல்களை அமெரிக்கா திட்டவட்டமாக அறிவிக்கவில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் வருகிறார் அமெரிக்க உதவிச் செயலாளர்



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். அன்றையதினம் கொழும்பு வரும் அவர் யாழ்ப்பாணத்திலும் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

இந்தத் தகவலை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

போருக்கு பிந்திய நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இலங்கை அரச அதிகாரிகளை சந்திப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

தனது விஜயத்தின் போது 19 ஆம் பக்கம் பார்க்க

08



விலகல்

## சுதந்திரதின விழா இம்முறை கேகாலையில்

இலங்கையின் சுதந்திர தினம் இம்முறை 'ஒற்றுமையை வளர்ப்போம் உலகை வெல்லும் தேசமாய்' என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படும் என அரச நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார். சுதந்திரதின ஏற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் 19 ஆம் பக்கம் பார்க்க

11



பிரிவு

## ரெலி மெயில் சேவை எம்.பி.க்களுக்கு இலவசம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக ரெலிமெயில் சேவை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தபால் திணைக்களம் கடந்த ஒக்ரோபர் மாதம் தந்தி சேவையை நிறுத்தியது. இதனையடுத்து ரெலிமெயில் சேவைகளை சிறந்த முறையில் 19 ஆம் பக்கம் பார்க்க



## அமெரிக்க அணுகுமுறை தவறு; உள்நாட்டு பொறிமுறையே தேவை

### லலித்வீரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் அணுகுமுறை முற்றிலும் தவறானது எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு உள்நாட்டுப் பொறிமுறையே மிகவும் பொருத்தமானது என்றும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அமெரிக்கா கூறுவது போல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளனவா என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் உயிரிழந்தமைக்கான பதிவுகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை இராணுவத்தினர் பொது மக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தவில்லை எனவும், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கடுமையான ஆயுதங்கள் பயன்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், பொதுமக்களை விடுதலைப் புலிகள் மனிதக்கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தின்போது பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்பதனை மறுப்பதற்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் கடந்த 18 மாதங்களாகவே அமுல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.இந்த நடவடிக்கைகள் 19 ஆம் பக்கம் பார்க்க

# உயர்தொழில்நுட்ப பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப கணக்கியல் முகாமைத்துவப் பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நேற்று முன் தினம் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது அவர் கருத்துத்தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் அரசியல் காரணத்திற்காக இளந்தலைமுறையினரின் சக்தியை சில அரசியல்வாதிகள் தவறான முறையில் பயன்படுத்தியுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான எதுவித ஆக்கபூர்வமான செயல்களையோ அவர்களின் வேலைவாய்ப்பு வழங்கத்தக்க வகையிலான செயற்பாடுகளையோ முன்னெடுக்கவில்லை என்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

நாட்டின் மிகப்பெரிய சக்தியாக விளங்குவது இளந்தலைமுறையினருடைய சக்தி. இவ்வாறான சக்தி ஆக்கபூர்வமான செயற்பாடுகளிற்கு சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

சுயநலவாத அரசியல் வாதிகளின் வலைக்குள் அகப்பட்டு இருப்பதையும் இழக்கக் கூடாது.

இவ்வாறான அரசியல் வாதிகளினால் வேலைவாய்ப்பு அற்று இருக்கும் இளைஞர்களுக்கு அவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையானவற்றை வழங்கவோ அவர்களின் அத்தியாவசிய பிரச்சினையாகவுள்ள வேலைவாய்ப்பினையோ ஒருவருக்குக் கூட பெற்றுக்கொடுக்க முடியாது. அவ்வாறு பெற்றுக்கொடுக்க முயலவும் மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மேற்படி பட்டதாரிகளுடன் தொலைபேசிவாயிலூடாக கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக்கூறி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.




# மெய்வன்மைப் போட்டி

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை அதிபர் நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சேது விபுலானந்தா (ஸ்கந்தவரோதயன்) கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வீதி அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வன்றதாஸ் (ஸ்கந்தவரோதயன்), கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.சிவன்சே கலந்து கொள்வார். துறைசார் விருந்தினராக வேலணைப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஜசிந்தன் கலந்து கொள்வார். (48)

# தெளிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

உற்பத்தி திறன் மேம்பாட்டு அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் பாடசாலைத்துறை, அரச, தனியார் துறை தொடர்பான போட்டி நெறிப்படுத்தல்களை தெளிவூட்டும் செயலமர்வு நாளை மறுதினம் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தின் அனு. சரணையுடன், நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வானது மூன்று பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 வரை பாடசாலைத் துறை, முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை அரச துறை, பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை தனியார்துறை. என இச்செயலமர்வில் உற்பத்தித்திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் சார்பான பிரதிநிதி ஒருவரை கலந்துகொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.


## 3 ஆம் ஆண்டு ஆறா நினைவஞ்சலி

மண்ணில் 16 - 08 - 1981

விண்ணில் 29 - 01 - 2011



## இரத்தினசிங்கம் - சதீஸ்

(ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மருதங்கேணிப் பிரதேச இணைப்பாளர்)

ஆண்டுகள் பல கடந்தாலும்
அழியாது உன் நினைவுகள்
ஆற்றிய உன் சேவைகள் - என்றும்
ஆயிரம் தலைமுறையாய் நிலைக்கும்
உருப்பெருத்த உடம்பும் - அன்று
ஊர்வலம் வந்த பாதச்சுவடியும்
உன்னத சேவை உள்ளமும் - இன்று
உலகமே புரிந்து செல்கின்றது
வரலாற்றுப் பெருந்தலைவன்!
வழித்தடத்தில் சென்ற புதல்வா!
விழி வைத்த காவலன் - உனை
பலி எடுக்க நினைத்தானோ
கல்வி என்னும் கண்ணால்
கரை சேர்ந்த பட்டங்கள்
கண்ணாடித் துண்டங்களாய்
கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

(இ) ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி


# கும்பாபிஷேகமும் குருபூசைத்தினமும்

(நயினாதீவு)

ஈழத்தின் சித்தர் வரிசையில் போற்றப்பட்டுவரும், நயினை சாமிகள் என வணங்கப்படுபவருமான, ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகளின் சமாதி திருக்கோவில் புனருத்தான கும்பாபிசேகமும், சாமிகளின் 65 ஆவது குருபூசை தினமும் நாளை சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணியளவில் இடம்பெறும் இந்நிகழ்வில் விசேட பூசை அபிசேக ஆராதனையும், மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (21)


## சிறுவிளம்பரம்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கும் காப்புறுதிக்கூட்டுத் தாபனத்துக்கும் அருகாமையில் கிழக்கு வீதியோடு சேர்ந்த ஒன்றரை பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 077 188 0017 (C/3402)



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1029 | திகதி 27.01.2014

வெற்றி எண்கள் ஆங்கில எழுத்து

08 38 40 63 M

**ஜக்பொட் பரிசு ரூ. 2,03,96,540/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,03,96,540/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 272 | 1,000/= | ரூ. 2,72,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 491 | 1,000/= | ரூ. 4,91,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11921 | 60/= | ரூ. 7,15,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6158 | 40/= | ரூ. 2,46,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156542 | 20/= | ரூ. 31,30,840/= |
| ஆங்கில எழுத்து | 22760 | 20/= | ரூ. 4,55,200/= |
| | | மொத்தம் ரூ. | 66,60,620/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மன்னார் | 605655242-3-43 |
| கம்பஹா | 605649857-4-24 |
| திருக்கோணாமலை | 605654934-0-40 |
| களுத்துறை | 605646815-1-01 |
| புத்தளம் | 605652858-2-22 |
| பதுளை | 605641468-2-02 |
| இரத்தினபுரி | 605648127-7-27 |
| அம்பாறை | 605648236-2-32 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,60,620/=

**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 20,702,500/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.01.30 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/3264)

# பெரியார்களுக்கு சிலை வைப்பது குறித்து மாநகரசபையில் கலந்துரையாடல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பெரியார்களுக்கான சிலை வைப்பது தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாநகர முதல்வர் திருமதி.யோ.பற்குணராசா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் யாழ் மாநகரசபையின் கௌரவ உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள். பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பல கருத்துக்களும் முன்மொழியப்பட்ட நிலையில் ஏற்கனவே யாழ். தமிழ்ச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபை தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு மடத்தடிச் சந்தியில் சிலை அமைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட சபைத் தீர்மானம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந் நிலையில் சிவில் சமூகத்தினால் முன்மொழியப்பட்ட ஆறுமுகநாவலருக்கு தபால் கந்தோர்ச் சந்தியில் சிலை அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பல்வேறுபட்ட கருத்துக்களுக்கு மத்தியிலும் குறித்த இரு பெரியார்களுக்கும் குறிப்பிட்ட இடங்களில் சிலைகள் வைப்பது என முடிவுகள் எட்டப்பட்டன. குறித்த இம் முடிவுகள் எதிர் வரும் சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் மீண்டும் தீர்மானத்திற்காக சமர்பிக்கப்படவுள்ளது. (48)

# வீதிகளில் மரக்கிளைகள் அகற்றுமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட தபாற்கந்தோர் வீதி, டச்சு வீதி போன்ற பாதையில் மின்சாரத்திற்கு இடைஞ்சலாக உள்ள மரக்கொப்புக்கள் வெட்டப்பட்டு வீதியின் அருகில் உள்ளதாகவும் இதனால் இவ் வீதியினை பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட வீதியில் உள்ள காணி உரிமையாளர்கள் இம் மரக்கிளையினை அகற்ற முன் வரவேண்டும் என்று அவ் வீதியினை பயன்படுத்துவோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வீதியில் மரக்கிளைகள் உள்ளதனால் விபத்துக்கள் ஏற்படவாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (130)

# பாடசாலை நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு



(வடமராட்சி)

யாழ். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய நூலகத்திற்கு மாணவர்களின் ஆங்கில வாசிப்பை ஊககுவிக்கும் நோக்குடன் கொக்குவிலைச் சேர்ந்த சி.செந்தில் செல்வன் (B.Sc Engineering U.K); ஒரு தொகுதி ஆங்கில நூலகளை வித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராசாவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

மேற்படி நூல்கள் கையளிக்கும் நிகழ்வில் வித்தியாலய நூலக ஆசிரியர் செல்வி செ.செல்வரஞ்சினி மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி நூல்கள் காட்சிப் படுத்தப்பட்டதுடன் மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (63,90)

# கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

ஆனையூர் இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் மயிலிட்டி றோமன் கத்தோலிகக தமிழ்க்கலைவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு இனறு புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர்கழக சம்மேளனத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் முதற் செயற்றிட்டமாக இது அமையவுள்ளது.

இதனது தொடர்ச்சியாக பாடசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டியை முன்னிட்டு பாடசாலை மைதானமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. (48)

# வீதியில் கொட்டப்பட்டுள்ள மண் போக்குவரத்துக்கு பாரிய இடையூறு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்குச் செல்லும் வீதியில் கொட்டப்பட்டிருக்கும் மண் காரணமாக அதிலிருந்து எழும் தூசியால் வீதியில் பயணிகக முடியாதநிலை எழுநதுள்ளது.

வீதி அபிவிருத்தியின் பொருட்டு கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை சந்திக்குச் செல்லும் வீதியின் இரு புறமும் அகழப்பட்டுள்ளது.

அகழப்பட்ட மண் அகற்றப்படாது தார் வீதியின் மேல் போடப்பட்டுள்ளது.

இதன் மீது வாகனங்கள் செல்லும் போது அதிலெழுகின்ற தூசு காரணமாக வீதியில் பயணிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை எழுந்துள்ளது.

அத்துடன் தூசு காரணமாக ஏனைய வாகனங்களை அவதானிக்க முடியவில்லை என பலர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இதனால் அவ் வீதியில் பயணிக்கும் பலர் பகலிலும் முன்புற விளக்கை ஒளிரவிட்டே செல்கின்றனர்.

தினமும் அதிகளவானோர் பயன்படுத்தும் வீதியாகவும் பெருமளவான பாடசாலை மாணவர்கள் அலுவலகர்கள் பயன்படுத்தும் வீதியாகவும் குறித்த வீதியே விளங்குகின்றது.

வீதியில் கொட்டப்பட்டிருக்கும் மண் காரணமாக எழும் தூசியினால் சுவாசப்பை சம்பந்தமான நோய்கள், சளி, முட்டு போன்ற நோய்களுக்கும் ஆளாகும் வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது.

இதேவேளை குறித்த வீதியில் உணவகங்களும், ஏனைய கடைகளும் அமைந்துள்ள போதிலும் எவரும் இது குறித்து நடவடிக்கைகள் எடுத்ததாக தெரியவில்லை. என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (48)

# சிவில் பாதுகாப்புக்குழுக்களை இயங்க வைக்குமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரவுக்குட்பட்ட ஆலயங்களின் பரிபாலனசபைத் தலைவர், செயலாளர், ஆலய பூசகர் ஆகியோருடனான சந்திப்பில் அலய நிர்வாகத்தினர் சிவில் பாதுகாபுக் குழுக்களை வலுவடைய தாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலயங்களில் உள்ள பெறுமதியான தங்க நகைகளை வங்கியில் லொக்கரில் வைப்பு செய்யுமாறும் திருவிழாக் காலங்களில் எடுத்துவந்து தேவைக்கேற்ப வகையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது.

மேலும் ஆலய செலவுக்கு ஏற்ற வகையில் பணத்தினை வைத்துக்கொண்டு மிகுதிப் பணத்தினை வங்கியில் ஆலய நிர்வாகக் கணக்குகளில் வைப்புச் செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

ஆலயங்களின் இரும்பு பெட்டகத்தினை பயன்படுத்துமாறும் கூறப்பட்டது. கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலய நிர்வாகசபை தலைவர், செயலாளர், தர்மகர்த்தா சபையினர், சிவில் பாதுகாப்புக்குழு தலைவர் உட்பட பெருமளவானோர் இதில் பங்கு பற்றியிருந்தனர். (130)

# யாழில் செயற்பட்டுவரும் சுவிஸ் வீசா அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

சுவிஸர்லாந்து வீசா அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருவதாக இலங்கையிலுள்ள சுவிஸர்லாந்து தூதரகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இல 89 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இவ் அலுவலகம் இயங்கி வருவதுடன் காலை 8 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை மக்கள் வீசா தொடர்பான தகவல்களை விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

அது தொடர்பான மேலதிக விபரங்களை email- info.switzerland@vfshelpline.com,wecsite-www.vfsglobal.ch, switzerland srilanka என்ற முகவரியிலும் பார்வையிடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






தென்னிந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தின் விஞ்ஞானிகள் அபிவிருத்தி கல்வியியலாளர் அமைப்பினால் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர் விருது பெற்ற கலாநிதி பா.நிமலதாஸனுக்கு பாராட்டி வாழ்த்தும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நிமலதாஸனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி வைப்பதையும் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (படங்கள்: இ.இராஜ்குமார் (11))

உண்மையாக நடந்துவரும் மனிதனுக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. - வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ் ஊடகங்கள் செய்வது சரியா?

மிக நீண்ட காலமாக தமிழ் சமூகத்தின் பெரும்பான்மை ஆதரவை தேர்தல் வாக்குகள் மூலம் பெற்ற தரப்பாக தமிழரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருந்து வருகிறார்கள்.

எல்லாத் தேர்தல்களிலும் தங்களது அதிகப்படியான வாக்குகளை அளித்து, தங்களுக்காகப் பேசவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வேண்டிய பெரும்பான்மை அரசியல் அதிகாரத்தையும் பொறுப்பையும் அவர்களுக்கே தமிழ் மக்கள் வழங்கிவந்திருக்கிறார்கள்.

ஆனால், மக்களுக்குச் சேவை செய்யவென்று தேர்தலில் வென்ற இத்தனை உறுப்பினர்கள், மக்கள் நலன்களைக் கவனிக்கவென பொறுப்பேற்றுக் கொண்ட இத்தனை சபைகள், வட மாகாண சபை ஆட்சிப்பொறுப்பு அத்தனையும் பெற்று வைத்திருக்கும் இவர்கள் மக்களுக்கு இதுவரை செய்தவை என்ன? செய்துகொண்டிருப்பதென்ன?

தமிழ் மக்கள் வழங்கிய இத்தனை அரசியல் அதிகார பலங்களையும் பெற்றிருக்கும் இவர்கள் வடக்கில் படையினர் குறைப்பு, பாதுகாப்புத் தேவைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மக்களது காணிகளை மீளளிப்பது, முழுமையான தீர்வு அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வது போன்ற படிப்படியாக நடந்தேற வேண்டிய விஷயங்களை, வெறுமனே உணர்ச்சிகர கோஷங்களாக மாற்றி அரச வெறுப்பையூட்டி மக்களைத் திசைதிருப்பி வைத்திருப்பதன் மூலம், மக்களுக்கு எதையும் செய்யாமலும் தீர்வுக்கு முயற்சிக்காமலும் ஏமாற்றுகிறார்கள்.

இவர்கள் இப்படி சுலபமாக மக்களை ஏமாற்றிச் சென்றுகொண்டிருப்பதற்குப் பிரதான காரணமாக இருப்பது, இதைத் தட்டிக்கேட்டு நெறிப்படுத்துவதற்கான பலம் வாய்ந்த எதிர்த் தரப்போ எதிர்க் கட்சியோ ஊடக சக்திகளோ அல்லது அழுத்தக் குழுக்களோ தமிழ் சமூகத்திற்குள்ளே இல்லாமலிருக்கும் குறைபாடாகும்.

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் கூட்டமைப்பினரின் அரச எதிர்ப்பு மாயைக்குள் விழுந்திருப்பதன் மூலம், கூட்டமைப்பினரின் செயலற்ற, அவர்கள் தொடர்ந்து செய்துவரும் ஒரேவிதமான ஏமாற்றுக்களைத் தட்டிக் கேளாமல் அல்லது இன்றைய சூழ்நிலையில் நடைமுறைக்குச் சாத்தியமானது எது? செய்யப்பட வேண்டியது எது? என்பதை யதார்த்த நிலையில் நின்று மக்களுக்குத் தெரியப்படுத்தாமல், கூட்டமைப்பினருக்கு ஒத்தூதியபடி ராஜதந்திர ரீதியில் தமிழ்த்தரப்பைத் தோல்வியடைய வைத்துக்கொண்டிருக்கின்றன.

கூட்டமைப்பினரோடு சேர்ந்துகொண்டு தமிழ் ஊடகங்களும் அரசவெறுப்பையும் சர்வதேசத்தில் அரசுக்குத் தண்டனை வாங்கித் தருவதையுமே தமிழ்மக்களின் இன்றைய தேவையாக எழுதி வருகின்றன. தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர அது போதுமா? அதற்குப் பிறகு என்ன செய்வது?தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப்பெற சர்வதேசம் என்ன சொல்லும்?

இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு வரவேண்டுமானால் நாம் யாருடன் பேச வேண்டும்? யார் யாருடைய அங்கீகாரம் பெற்றால் அது இங்கு அரசியல் சட்டமாக வரமுடியும் என்பது பற்றியும் அதற்குச் செய்யவேண்டிய முயற்சிகள் பற்றியும் குறித்துக்காட்ட வேண்டிய கடமையும் பொறுப்பும் ஊடகங்களுக்கு இல்லையா?

வெறுமனே அரசையும் சிங்கள சமூகத்தையும் பகைநிலைக்குத் தள்ளிவிட எழுதிக்கொண்டிருப்பதன் மூலம் தமிழ் ராஜதந்திரத்தில் எதைச் சாதிக்க முடியும்? மக்களை உணர்ச்சிவச நிலையில் வைத்திருந்து கூட்டமைப்பினருக்குத் தேர்தல் வெற்றிகளை வாரிவழங்கிக் கொண்டிருப்பதுதான் தமிழ்மக்களின் எதிர்காலம் குறித்து அக்கறைப்பட வேண்டிய ஊடகங்கள் செய்யும் செயலா?

தமிழ் மக்கள் மத்தியில் மாற்றுச் சிந்தனைகளையும், மாற்றுத் தரப்புகளையும், காலத்துக்கேற்ற புதிய நோக்குகளையும் உருவாக்குவதிலும் வளர்த்தெடுப்பதிலும் தமிழ் ஊடகங்கள் ஏதாவது பங்களிப்புச் செய்கின்றனவா? சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

-ஆசிரியர்

# அரசாங்கத்திற்கு ஏற்படும் பிரச்சினை முழு நாட்டையும் பாதிக்கும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது முழு நாட்டையும் பாதிக்கும். இதை அனைத்துக் கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவா அழுத்தங்களையும் நாட்டில் பிரிவினைவாதத்தினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்படுத்துகின்றது. சர்வதேச பிரச்சினைகளைத் தூண்டி இலங்கையில் தனித் - தமிழ் ஈழத்தினை உருவாக்கவே சம்பந்தன் கூட்டணி முயற்சி செய்து வருகின்றது.

நாட்டின் பிரச்சினையாக இருந்த விடுதலைப் புலி தீவிரவாதிகளை அழித்த போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினையும் தடை செய்திருக்க வேண்டும். அன்று அரசாங்கம் கவனிக்காது செயற்பட்டமை இன்று நாட்டிற்கே பிரச்சினையாக அமைந்துள்ளது.

இன்று அரசாங்கத்திற்கு இருக்கும் முக்கிய எதிரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பேயாகும். அவர்களின் செயற்பாட்டினை தடை செய்ய முடியுமாயின் அரசாங்கத்தினால் சர்வதேச பிரச்சினைகளில் இருந்து இலகுவாக வெளிவர முடியும்.

எனினும், ஜனாதிபதி இதனை செய்யாதிருப்பது ஏன் எனத் தெரியவில்லை. அரசாங்கம் மக்கள் தொடர்பிலேயே முதலில் சிந்திக்க வேண்டும். இலங்கையில் மக்களின் பெரும்பான்மை விருப்பத்திற்கு அமையவே ஆட்சி நடத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வார்த்தைகளைக் கேட்டு இலங்கையில் ஆட்சியமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஒரே எண்ணம் இலங்கையில் தனி தமிழ் ஈழத்தினை உருவாக்குவதே. திருகோணமலை தொடக்கம் மன்னார் வரையில் முழுமையாக தன் வசப்படுத்தி இந்து சமுத்திரத்தில் தனி ஆட்சி நடத்தும் எண்ணமே இன்று கூட்டமைப்பிற்கு உள்ளது. இதனை அடையவே இன்று சர்வதேச சக்திகளுடன் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கைகோர்த்து செயற்படுகின்றன.நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்கால சிந்தனைகள் இல்லாது தான்தோன்றித்தனமாக அரசியல் செய்வதை ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்டுவிட்டு நாட்டிற்காக செயற்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கு பிரச்சினை ஏற்படின் அது முழு நாட்டிற்கும் பிரச்சினையேயாகும். சர்வதேச நாடுகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தால் அது பொது மக்களையே பாதிக்கும். இதனை மக்கள் விளங்கிக் கொண்டு அரசாங்கத்துக்கு துணையாக செயற்பட வேண்டும் என்றார்.

# மட்டக்களப்பு அபிவிருத்திக்கு 513 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென முதல் கட்டமாக 513 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக மட்டக்களப்பு திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீடுகளில் மட்டக்களப்புக்கு 208 மில்லியன், கல்குடாவுக்கு 137 மில்லியன, பட்டிருப்புக்கு 168 மில்லியனும் என தேர்தல் தொகுதி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை ஒருகிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம், திவிநெகும, கிராமப்புறப்பாலங்களும் பிரவேச வழிகளும், கிராமிப்பாடசாலை அபிவிருத்தியும் சுகநல நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர், முதியோர் இல்லங்கள் திருத்தம் செய்தல், உள்ளிட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு என பயன்படுத்தப்படவுள்ளது.

அபிவிருத்தித்திட்டங்களின் அடிப்படையில் பிரதேச செயலகங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் ஊடாக வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை,.கடந்த வருடம மட்டக்களப்பு மாவட்டத்திற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உட்பட அனைத்து அமைச்சுகளினாலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 6028 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதில் சுமார் 2000 மில்லியன் ரூபாய் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினுடையதாகும். இந்த நிதிகளில் 5130 அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றில் 75 வீதமான வேலைகள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட்டு, மிகுதியாக உள்ள வேலைகள் தற்போது தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடத்தில் ஊட்டப் பாடசாலைகள், தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம், திவிநெகும, கைவிடப்பட்ட பூர்த்தியாகாத சொத்துக்கள், திரியபியச, உட்பட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா மருக்காரம்பளை கிராமத்தில் மண்பானையில் பழங்கால நாணயங்கள்

(வவுனியா)

வவுனியா தாண்டிக் குளத்தில் இருந்து கல்மடு வரையான வீதி தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வரும் நிலையில் மருக்காரம்பளை கிராம வீதிக்கு அருகாமையில் நீர் ஓடுவதற்கான கால்வாயை கனரக இயந்திரத்தின் மூலம் தோண்டியபோது 120 பழஙகாலத்து நாணயங்கள் நேற்று மீட்கப்பட்டன.

மண் பானையொன்றில் காணப்பட்ட இந் நாணயங்கள் எக்காலத்துக்குரியவை என்பதனை அறிவதற்காக தொல்பொருள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலாளர் பந்துல கரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

சுமார் இரண்டு அடி ஆழத்தில் காணப்பட்ட மண் பானையிலிருந்து இந்நாணயங்களில் சின்னங்கள் பொறிக்கப்பட்டு சேதமடையாத நிலையில் உள்ளன. கனரக இயந்திரம் மூலம் கால்வாய் திருத்தம் செய்யப்பட்டு வருவதனால் இந்நாணயங்கள் வைக்கப்பட்டிருந்த பானை உடைந்து காணப்பட்டதுடன் அதனுள் இருந்த நாணயங்களும் சிதறிக்கிடந்தன.

இதேவேளை, அங்கிருந்து அகற்றப்பட்ட மண் வேறோர் இடத்தில் கொட்டப்பட்டு வருவதனால் மேலதிக நாணயங்கள் மண்ணோடு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வவுனியா மாவட்ட செயலாளர் பந்துல கரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலர் கா.உதயகுமார், கிராம சேவகர் எஸ். உமாபதி ஆகியோர் சென்று இந்த நாணயங்களை மீட்டு ஆய்வுக்காக பாதுகாப்பாக எடுத்துச் சென்றுள்ளனர்.

# 20 இலங்கை மீனவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், விடுதலை செய்யப்பட்ட 20 இலங்கை மீனவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

மீனவர்கள் 10 படகுகளுடன் கற்பிட்டியை அண்மித்த சர்வதேச கடற்பரப்பில் இந்திய கரையோர பாதுகாப்புப் பிரிவினரால், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இந்திய கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக இந்த மீனவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் சிலர் கற்பிட்டியைச் சேர்ந்தவர்கள் எனவும், ஏனையவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# தொப்புள் கொடி உறவும் - தகிக்கும் யதார்த்தங்களும்

**வெள்ளைக்காரர்கள் எல்லாவற்றையும் செய்து தருவார்கள். மற்றவர்கள் தம்மை விட தரம் தாழ்ந்தவர்கள் என்ற மனநிலையே பிரதானமாக வடக்கு யாழ்ப்பாண மைய அரசியலின் சாரம்சமாகும். அது பொதுவாக தமிழக அறம் சார் இலக்கியவாதிகளுடனோ அல்லது சமூகப்பிரக்ஞை கொண்ட எழுத்தாளர்களுடனோ தொடர்புபட்டதில்லை. தமிழகத்தில் அக்கறைக்குரிய அறங்கள் எல்லாம் ஈழத்தமிழர் ஆதிக்க அரசியலில் அக்கறைக்குரியவை அல்ல.**

சுகு-ஸ்ரீதரன்

இன்று தமிழ் -தமிழன்- உலகத் தமிழர் ஒற்றுமை -தனிக் குணம் -பழமை உலகில் அனைத்து மொழிகளிலும் தொன்மையானது என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

ஆனால் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஈவெரா பெரியார் தமிழகத்தில் தீண்டாமை பெண் அடிமைத்தனம், சமயம் பற்றிய அறக் கோட்பாடுகளை முன்வைத்துச் செயற்பட்டார்.

தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் ஒரு தீவிர மறுமலர்ச்சி சீர்திருத்த இயக்கத்தை அவர் நடாத்தினார்.

அதன் பின்புலத்திலேயே தமிழகத்தின் இரண்டு திராவிட கட்சிகளும் உருவாயின. இவற்றை விட இந்தப் பாரம்பரியத்தில் வந்த வேறுபல இயக்கங்கள் இருக்கின்றன.

அங்கு சாதியம்,பெண்ணடிமைத்தனம், மதச்சீர்திருத்தங்கள் பற்றிய அக்கறைகள் பெருமளவில் நிலவுவதை நாம் கவனிக்காமல் விட முடியாது.

கருணாநிதியிடம் இன்று உலகில் வாழும் தலைவர்களில் அவருக்குப் பிடித்தவர்கள் யார் என்று கேட்டால் அவர் பிடலைத்தான் சொல்லுவார்.

பெரியாருக்கு ஸ்டாலினைப் பிடிக்கும். இன்று தமிழ் நாட்டில் பல ஸ்டாலின் பெயர்கள் பெரியாரால் சூட்டப்பட்டவையே.

இடதுசாரிக் கட்சிகளும் தேர்தல் என்று வரும்போது இந்த பிரபல திராவிட கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொள்வார்கள்.

அமெரிக்கா கடுமையான பொருளாதாரத்தடை விதித்த நாட்களில் கியூபாவிற்கு உணவுப்பொருள் சேர்த்தனுப்பும் இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் முயற்சிக்கு தமிழக மக்கள், பல்வேறு கட்சிகள், கலைஞர்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.

மண்டெல் கமிசன் பரிந்துரைகள் ஏகோபித்த முறையில் தமிழக அரசியல் கட்சிகளால் வரவேற்கப்பட்டன. பின்தங்கிய சமூகங்களுக்கான இட ஒதுக்கீடுகள் பற்றிய அக்கறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் மீதான அத்து மீறல்களை பொலிஸ்நிலையங்களில் முறையிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்காக பெண்களுக்கோ சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள்- தலித்துக்களுக்கோ பிரச்சினைகள் இல்லையென்றில்லை.

ஆனால் தமிழகத்தில் இன்று இடதுசாரி இயக்கம், பெரியாரின் இயக்கம், அம்பேத்கர் இயக்கம், தோழர் ஜீவா, காமராஜர் பாரம்பரியத்தின் செல்வாக்கு மேல்நிலையில் இருக்கிறது.

பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், கண்ணதாசனின் பாடல்களிலும் எம்.ஜி.ஆர்.- சிவாஜி படங்களிலும் கலைஞரின் வசனங்களிலும் சீர்திருத்த- பகுத்தறிவுக் கருத்துக்கள் இழையோடும்.

ஆனால் யாழ்மைய அரசியல் பொதுவாக வலதுசாரி வகைப்பட்டது. அதற்கு பெரியாரோ, அம்பேத்கரோ, காமராஜரோ, ஜீவாவோ உவப்பானவர்கள் அல்ல.

தொப்புள் கொடி உறவு பற்றிப் பேசுவார்கள். சமகால சமூக பொருளாதார மாற்றங்கள் அதனூடாக எழுந்த இந்திய தமிழக சமூக விழுமியங்களுடன் ஈழத்தமிழர் அரசியல் நெருக்கமானதல்ல.





அப்படிப் பார்த்தால் இலங்கையின் இடதுசாரி அரசியலும் ஈழ முற்போக்கு அரசியலும் மாத்திரமே தமிழகத்திற்கு நெருக்கமானவை.

வெள்ளைக்காரர்கள் எல்லாவற்றையும் செய்து தருவார்கள். மற்றவர்கள் தம்மைவிட தரம் தாழ்ந்தவர்கள் என்ற மனநிலையே பிரதானமாக வடக்கு யாழ்ப்பாண மைய அரசியலின் சாரம்சமாகும்.



அது பொதுவாக தமிழக அறம் சார் இலக்கியவாதிகளுடனோ அல்லது சமூகப்பிரக்ஞை கொண்ட எழுத்தாளர்களுடனோ தொடர்புபட்டதில்லை.

தமிழகத்தில் அக்கறைக்குரிய அறங்கள் எல்லாம் ஈழத்தமிழர் ஆதிக்க அரசியலில் அக்கறைக்குரியவை அல்ல.

அதே மாதிரியான பிரச்சினைகள் இங்கும் இருக்கின்றன.

ஆனால் அவை பற்றிய அக்கறைகள் இங்கு முற்போக்காளர்களுக்கு மாத்திரம் உரியவை.

இது முதலில் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

ஈழத்தமிழர் ஆதிக்க அரசியல் தனது சொந்த நலன்களுக்காகவே "வெறும்" மொழி- பொருளாதார நலன்களையும் வைத்து மாத்திரம் கொண்டு தொப்புள் கொடி உறவு பற்றிப் பேசுகிறது.

புலம்பெயர் வியாபாரமும் நுகர்வும் பெருமளவு தமிழகம் சார்ந்தது.

ஆனால் யாழ்மையவாதம் இந்தியர்களை- தென்னிந்தியத் தமிழர்களை விட தாம் ஒரு படி உயர்ந்தவர்களாகவே நோக்குவது.

வெள்ளைக்காரர்கள் தான் தமக்கு சமதையானவர்கள் என்ற ஆதிக்கத்திமிர் மனோநிலையைக் கொண்டது. ஒருவித அடிமை மன நிலையும் கூட. மற்றபடி சிங்களவர்களோ, ஆபிரிக்கர்களோ இதர மக்கள் குழுவினரோ தமக்கு நிகரானவர்கள் இல்லை என்ற இறுமாப்பும் இருக்கிறது.

மேற்போனால் இஸ்ரேல்காரர்களும் தாமும் ஒன்று என்ற மனோநிலையும் இருக்கிறது.

இதனை ஒரு தொற்று வியாதி யாக இப்போது சிங்கள ஆளும் வர்க்கத்தினருக்கும் பரப்பியிருக்கிறார்கள்.

தமிழகத்தின் சில அரசியல் பிரிவினருக்கு இது தெரியாதது. விளங்கிக்கொள்ள முடியாததென்றும் இல்லை.

ஆனால் அவர்களுடைய பொருளாதார நலன்களுக்கும் நாட்டின் தேர்தல் அரசியலுக்கும் பயன்படுகிறதென்றால் மெருகேற்றி பயன் படுத்துவார்கள்.

ஈழத்தமிழர் பற்றிய அவர்களது அறிவிலும் பிரச்சினை இருக்கிறது.





கிழக்கு-மலையகத் தமிழர், முஸ்லிம் மக்கள்,சிங்களவர்கள் பற்றிய அறிவு அல்லது இலங்கை சமூகங்களின் வரலாறு பற்றிய அறிவும் குறைவாகவே காணப்படுகிறது. ஈழப் போராட்ட வரலாறு, ஜனநாயக மறுப்பு, இனப்பிரச்சினையின் தாற்பரியம் பற்றிய' மேம்போக்கான ஒரு திரிந்த அறிவே காணப்படுகிறது.

சிங்களவர்கள் என்றால் உலகில் மிக மோசமான மனிதர்கள் என்று சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஆட்சியாளர்களுக்கும் சாதாரண மக்களுக் குமிடையே தெளிவான வேறுபாடுகள் இல்லை.

பௌத்த சிங்கள பேரினவாதம் போல் யாழ்மையவாதம் எவ்வளவு மோசமான நச்சு அரசியல் என்பதும் தெரியாது.

அது தமிழகம் மீதும் வெறுப்பை உமிழ்வது அருவருப்பது என்பதும் புரியாது.

உதாரணத்திற்கு தமிழக மக்களுக்கு ஈழத்தமிழர் நிலை ஏற்பட்டு இங்கு நிலைமை சுமுகமாக இருந்து அங்கிருந்து மக்கள் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை கற்பனை பண்ணிப் பாருங்கள். இங்கு சுயபச்சாத்தாபம் மாத்திரம் தான் இருக்கிறது.

எங்களைவிட உலகில் எவரும் கஷ்டப் படவில்லை என்ற கபடத்தனம் தான் செல்வாக்குச் செலுத்துகிறது.

புத்திசாலிகள், ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் வாழும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தமிழர்கள் சிறந்ததொரு சௌகரியமான புலம் பெயர் வாழ்வை அமைத்துள்ளார்கள்.

ஆனால் இன்னுமொரு பிரிவினர் 30 ஆண்டு போர் அனுபவங்ளை முள்ளிவாய்க்கால்வரை பெற்று செத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த இழப்புக்களும் மரணங்களும் தான் வட அமெரிக்க, ஐரோப்பிய வாழ்க்கையை ஸ்தாபித்தது.

அதனை இயக்கும் சத்தியாக இருந்தது யாழ்மையவாதமே.

இன்று யாழ்மையவாத சர்வதேச அரசியல் இங்கு ஈழத்தமிழர்களுக்கு நல்வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்கென்று கருதினால் அது அடி முட்டாள்தனமானதாகும்

அது பிரக்ஞை பூர்வமாகவே ஐரோப்பாவிலும் வட அமெரக்காவிலும் தனது சௌகரியமான இருப்புக்காக உள்ளூர் தமிழர்களின் பிரச்சினைகளை மூலதனமாக்கியிருக்கிறது.

நாடு கடந்த தமிழீழம் என்பதும் அதுதான்.

இங்கு பிரச்சினை தீராமல் இருப்பதையே யாழ்மையவாதிகள் விரும்புகிறார்கள்.

இப்போது பிரச்சினை எல்லாம் இங்கு வாழ்க்கையை கட்டியமைக்கமுடியுமா என்பதே.

இலங்கையின் ஜே.ஆர் - மகிந்த வரை யாழ்ப்பாண மன நிலையின் குணம் குறிகளை நன்கு புரிந்து

**இங்கு பிரச்சினை தீராமல் இருப்பதையே யாழ்மையவாதிகள் விரும்புகிறார்கள். இப்போது பிரச்சினை எல்லாம் இங்கு வாழ்க்கையை கட்டியமைக்கமுடியுமா என்பதே. இந்த நிலத்தில் கௌரவமாக மரியாதையுடன் வாழ்வதற்கு எத்தனை பேருக்கு விருப்பம் என்பதுதான் முக்கிய கேள்வி.**

வைத்திருக்கிறார்கள்.

காலப்போக்கில் வடக்கு- கிழக்கு வெறிச்சோடி விடும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும்.

அந்த இடைவெளியில் குடியேற்றத்தையும், இராணுவ மயமாக்கலையும், கலாச்சார ஆக்கிரமிப்பு கெடுபிடிகளையும் அதிகரித்துச் செல்வார்கள்.

1980களில் ஆட்கள் வெளியேறிச்செல்வதை ஊக்குவித்தது போலவே யுத்தம் முடிந்த கையோடு சரமாரியாக ஆட்கள் வெளியேறுவதை இலங்கை அரசு ஊக்குவித்தது.

அண்மைய அவுஸ்திரேலிய கடல் பயணங்களில் எத்தனை பேர் கடலில் மாண்டார்கள் என்று தெரியாது.

மனிதர்கள் இவ்வாறு வெளியேறுவது தேசிய எல்லைகள் என்று சொல்லப்படுவதை கடப்பது பிரிச்சினை என்று கூறவரவில்லை.

மனிதகுல வரலாறு முழுவதும் இது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆனால் ஒரு சமூகத்தின் இருப்பை நிராகரிக்கும் அரசின் போக்கும் அதனை மானசீகமாக ஏற்றுக் கொண்டு பகிரங்கத்தில் பாசாங்காக வார்த்தைகளை உதிர்க்கும் தமிழ்ப்போலித்தனமும் தான் பிரச்சினை.

இந்த நிலத்தில் கௌரவமாக மரியாதையுடன் வாழ்வதற்கு எத்தனை பேருக்கு விருப்பம் என்பதுதான் முக்கிய கேள்வி.

## ஆஸி-மாணவி மீது தெற்கில் வல்லுறவு

(கொழும்பு)

கொழும்புக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட அவுஸ் ரேலிய பல்கலைக்கழக மாணவி ஒருவர் தென்பகுதி நகரான அம்பலாங்கொடவில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள் ளார்.

அம்பலாங்கொட கடற்கரைப் பகுதியில் வைத்து தம்மை சுற் றுலா வழிகாட்டி ஒருவர் பாலி யல் வல்லுறவுக்குட்படுத் தியதாக, அவுஸ்ரேலிய தேசிய பல்க லைக்கழக மாணவி, அம்பலாங் கொட பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கல்விச் சுற்றுலாவை மேற் கோண்டு குறித்த மாணவி, 15 பேர் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களுடன் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவியை மருத்துவ பரிசோதனைக்குட் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ள அதேவேளை, அவரை வல்லுறவுக்குட்படுத்திய சுற்றுலா வழிகாட்டியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

குறிப்பிட்ட நபர் அந்தப் பிர தேசத்தை விட்டு தப்பிச் சென் றுள்ளதாகவும், எனினும் அவரைக் கைது செய்வதற்கு நாடு முழுவ திலும் தேடுதல்கள் மேற்கொள் ளப்படுவதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பழிவாங்கும் முயற்சியில் மேற்குலகம் தீவிரம்

## சாடுகிறார் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானங்களின் மூலம் இந்த அரசாங்கத்தை கவிழ்த்து அமெரிக்காவுக்கு ஏற்ற அரசாங்கத்தை அமைப்ப தற்கு சர்வதேச சக்திகள் முயற் சிக்கின்றன . இந்த அர சாங்கம் கவிழ்க்கப்படுமாயின் நாட்டின் மக்களுக்கே பிரச்சினைகள் ஏற்படும் என்று சிரேஷ்ட அமைச்சர திஸ்ஸ விதாரண தெரிவித்துள் ளார் .

இது தொடர்பாக அவர் மேலும கருத்துத் தெரிவிக்கை யில்,

நல்லிணக்க ஆணைக் குழுவின பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது . தற்போது எது தேவையோ , அதை சரியாக அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது என வும் அவர் கூறினார் .

எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கை மீதான பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இலங்கையை பழிவாங்கவே மேலைத்தேய நாடுகள் முயற் சித்து வருகின்றன . இம்முறை ஜெனிவா மாநாட்டில் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கப்ப டுமாயின் அது நாட்டையும் மக்களையுமே பாதிக்கும் . யுத்தம முடிவடைந்து இன்று . நான்கு ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் நாட்டில் மூவின மக்களிடையே அமைதியும் நாட்டில் அபிவிருத்திகளும் இடம பெற்று வருகின்றது . இதற்கு முட்டுக்கட்டை போடும் வகையில சர்வதேச பிரிவினைவாத சக்திகள் மற்றும் புலம்பெயர் விடுதலைப் புலி அமைப்புகள் என்பன செயற பட்டு வருகின்றமையினை நாம் வன்மையாகக் கண்டிக்கின் றோம் .

அமெரிக்கா , பிரித்தானிய நாடுகளுக்கு ஏற்ற வகையில் இலங்கையின் அரசியல் சூழலினை மாற்றி அமைக்கவே முயற்சிக்கின்றனர் . ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை மீதான அழுத்தங்களை அதிகரித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்த்து மேலைத்தேய நாடுக ளுக்கு ஏற்ற வகையில் இலங்கை யில் ஆட்சியை அமைக்க பலர் முயற்சிக்கின்றனர் .

தேர்தல் மூலம் இலங்கை யில் ஆட்சி மாற்றத்தினை ஏற்ப டுத்த முயற்சிக்கின்றனர் . இதில் தோல்வி கண்டால் சர்வதேச விசாரணைகள் , அழுத்தங்கள் மூலம் இலங்கையில் ஆட்சி மாற் றத்தினை ஏற்படுத்த முயற்சி களை மேற்கொள்வார்கள் .

இந்த அரசாங்கம் கவிழ்க்கப்படு மாயின் நாட்டில் தமிழ் , சிங்கள, முஸ்லிம் மக்களையே அதிகம் பாதிக்கும் . பொருளாதாரத்தடை களை விதித்து இலங்கையை யும் ஆபிரிக்க நாடுகளின் பட்டி யலில் இணைக்கும் மேலைத்தேய சக்திகளின் எண்ணத்திற்கு இடம ளிக்கக்கூடாது .

மேலும் இலங்கையில் கற்றுக் கொண்ட பாடங்கள்" மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தற்போது நடைமுறையில் உள்ளது . தற்போது இலங்கையில் எதைச் செய்ய வேண்டுமோ , அதை இந்த அரசாங்கம் சரிவர செய்து கொண்டுள்ளது . சர்வதேச கட்ட ளைகளின் படி அவர்கள் கூறும் அனைத்தையுமோ அல்லது நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையோ முழுமையாக அரசாங்கத்தினால் செயற்படுத்த முடியாது . எனினும் மக்களை பாதுகாக்கும் செயற்றிட்டங்கள் நாட்டில் இடம்பெறுகின்றமை யினை எவராலும் மறுக்க முடியாது .

இன்று வடக்கில் கட்டுப்பாடுக ளும் இட அபகரிப்புகளும் அர சாங்கத்தினால் செய்யப்படு கின்றது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன . ஆனால் உண்மை அதுவல்ல . யுத்தத் தின் பின்னர் வடக்கினை பாது காத்த மையும் கண்ணி வெடி களை அகற்றியதையும் இராணு வத்தினரே செய்தனர் . இன்று பொது மக்கள் வாழக்கூடிய சுதந்திரமான சூழலை இராணு வத்தினரே ஏற்படுத்திக் கொடுத் துள்ளனர் . இட அபகரிப்பினை அன்று விடுதலைப்புலிகளே மேற்கொண்டனர் . வடக்கில் வாழ்ந்த சிங்கள , முஸ்லிம் மக்க ளின் இடங்களை அபகரித்ததை யாரும் மறந்துவிடக்கூடாது . இன்று வடக்கில் வாழ்பவர்க ளில் பலர் சிங்கள மக்களின் காணிகளிலேயே குடியிருக்கின் றனர் .

வடக்கில் பொதுமக்களின் இடங்களை உரிய நபர்களிடம் ஒப்படைப்பது தொடர்பில் இறுதித்தீர்மானத்தை நீதிமன் றமே எடுக்கும் . இவ் விடயத்தில பொது மக்களையும் அரசாங்கத் தையும் முரண்பட வைக்கும் செயலை எதிர்க்கட்சிகள் மேற் கொள்ளக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்

# இடமாற்ற சபையின் மூலமாகவே ஆசிரிய இடாற்றம் வழங்க வேண்டும்

## ஜோசப் ஸ்ராலின் வேண்டுகோள்

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றங் கள் இடமாற்ற சபையினால் வழங்குவதற்கான நடவடிக்கை யினை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் இலங்கை ஆசி ரியர சங்கத்தின் பொதுச் செய லாளர் ஜோசப் ஸ்ராலின் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில், முல்லைத் தீவு மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் இடமாற்ற சபை யின் அனுமதியின்றி ஆசிரியர்க ளுக்கு இடமாற்றம் வழங்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2007/20 ஆம் சுற்றறிக்கை யின் பிரகாரம் இடமாற்ற சபை யினால் ஆசிரியர்களுக்கு இடமாற றங்கள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இடமாற்ற சபையினால் இடமாற்றங்கள் வழங்காது, முல்லைத்தீவு மற்றும் துணுக் காய் வலயங்களில் பாடசாலை அதிபர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு பாடசாலை அதி பர்களினால் வழங்கப்படும் இடமாற்றத்தினை இரத்துச் செய்து, இடமாற்ற சபையினால் ஆசிரி யர்களுக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வடமா காண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜாவுடன் அண்மை யில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், கல்வி அமைச்சரின் பதில் கிடைக் கவில்லை.பாடசாலை அதிபர்கள் தன்னிச்சையாக முடிவெடுத்து ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதால் ஆசிரியர்கள்



பெரிதும் பாதிக்கப்படுகின்றார் கள்.

எனவே பாடசாலை அதிபர்கள் தன்னிச்சையாக ஆசிரியர்க ளுக்கு வழங்கும் இடமாற்றத் தினை நிறுத்தி, ஆசிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு இட மாற்ற சபையினால் இடமாற் றங்கள் வழங்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என வடமாகாண கல்வி அமைச் சின் செயலாளர் எஸ்.சத்தியசீல னிடம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார

## வாழைப்பழத்துண்டு சிக்கி 8 மாதக் குழந்தை மரணம்

சுவாசக் குழாயில் வாழைப் பழத்துண்டு சிக்கியதில் தெடிக முவ பகுதியில் குழந்தை யொன்று உயிரிழந்துள்ளது. எட்டு மாதங்களே நிரம்பிய குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது, உயிரிழந்திருந்ததாக ஹோ மாகம வைத்தியசாலையின், வைத்திய அதிகாரி பிரதீப் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

வாழைப்பழத்துண்டு குழந்தை யின் சுவாசக்குழாயில் சிக் குண்டதை அடுத்து ஏற்பட்ட சுவா சக் கோளாறினால் குழந்தை உயிரிழந்திருக்கலாம் என வைத் திய அதிகாரி தெரிவித்துள் ளார்.

# எரிபொருள் வர்த்தகம் ஈரானுடன் தொடரும்

## வர்த்தக விவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈரானுடன் எரிபொருள் கொடுக் கல் வாங்கல்கள் தொடரும் என வர்த்தக விவகார அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள் ளார். ஈரான் மீதான பொரு ளாதாரத் தடை காரணமாக எரி பொருள் கொள்வனவு தொடர் பான 250 மில்லியன் டொலர் நிலுவைப் பணம் செலுத்தப்பட வில்லை என அவர் மேலும் தெரிவிக்கையில்,

விரைவில் ஈரானுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் செலுத்தப்படும் ஈரானுக்கு எதி ரான தடைகளினால் பல நாடுகள் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது சிக்கல்களை எதிர் நோக்கி வருகிறன.

அணுத் திட்ட விவகாரம் கார ணமாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் மிகவும் ஆழமான உறவுகள் நீடித்து வருகின்றது. இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஈரானிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# எதிர்க்கட்சிகளால் மக்கள் முன் சென்று வாக்குகளைச் சேகரிக்க முடியாது

மக்கள் முன் சென்று எதிர்க் கட்சிகளினால் வாக்குச் சேகரிக்க முடியாது. ஜெனிவா சென்று அதி காரத்தைக் கைப்பற்ற மேற்கொள் ளும் முயற்சியானது வெட்கப்பட வேண்டியது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் மூலம் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாத எதிர்க் கட்சியினர் ஜெனிவா சென்று, அர சாங்கத்தை கவிழ்க்க முயற்சிக் கின்றனர்.

நாட்டின் தலைமைத்துவம் குறித்து . வெளிநாடுகளுக்கு கோள் சொல்லி அதிகாரத்தை கைப்பற்ற சிலர் முயற்சி எடுத்து வருகின்றனர்.

அரசாங்கம் எல்லா கிராமங்க ளையும் அபிவிருத்தி அடையச்



செய்துள்ளது. 30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 30 ஆண்டுக ளில் பொருளாதாரப் போரை வெற்றிகொள்ள வேண்டும் என்றார் தங்காலை பிரதேசத் தில் நடைபெற்ற நிகழ்வு ஒன் றில் பங்கேற்ற போது அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ்மா அதிபருக்கு பவ்ரல் அமைப்பு மனு

(கொழும்பு)

பவ்ரல் அமைப்பினால் எதிர் வரும் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில், பொலிஸ் மா அதிபருக்கு நேற்று முன்தினம் மனு வொன்று கையளிக்கப்பட் டுள்ளது.

கடந்த தேர்தல் காலங்க ளில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களுக்கு அமைய இந்தமுறை தேர்தலின் போது அவதானம் செலுத்தப்பட வேண்டிய சில விடயங்கள் குறித்து அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் இடம்பெறும் காலப் பகுதியில், அரசாங்க சொத்துக் களின் முறையற்ற பயன்பாடு, வேட்பாளர்கள் மற்றும் அவர்க ளின் ஆதரவாளர்கள் சிவப்பு இலக்கத்தகடு பதித்த வாகனங் களை பயன்படுத்துதல் போன்ற விடயம் குறிப்பிடப் பட்டுள்ளன.

இதேவேளை, தேர்தல் பிரசாங் களில் ஈடுபடுவோருக்கு பொலிஸாரால் வழங்கப்படும் பாதுகாப்பு பக்கச்சார்பின்றி சம நிலைமையாக அமையவேண் டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

பிரசாரங்களுக்கான அனுமதி களும் சமாந்தரமாக அமைய வேண்டும்.

தேர்தல் செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்துக் கட்சித் தேர்தல் வன்முறை கண் காணிப்பு மத்திய நிலையத திற்கு கிடைக்கும் முறைப் பாடுகள் பொலிஸாரிடம் ஒப்ப டைக்கும் போது கூடிய கவனம் செலுத்துமாறு மனுவில் கோரப் பட்டுள்ளது.

# மக்களைப் புரிந்து கொள்பவர்களே உண்மையான பிரதிநிதிகள்



(கிளிநொச்சி)

மக்களின் தேவைகளையும், அவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு அந்த மக்கள் வழங்கிய ஆணையை மக்களின் நலன்களுக்கு பயன்படுத்தி சேவை செய்பவர்களே உண்மையான மக்கள் பிரதிநிதிகள் என ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள க்ரியாலை நாகபடுவான் கிராமத்தில் 11 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு நிலையத்தினையும், கிராஞ்சியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் சோஆ நிறுவனத்தினால் ஆறு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெற்களஞ்சியத்தினையும் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்தின் பின்பு கிளிநொச்சியிலேயே நாமும், இந்த மாவட்டத்தின் அரச இயந்திரமும் மக்களின் தேவைகளை முன்னிறுத்தி செயற்பாடுகளை நேர்த்தியாக முன்னெடுத்ததன் விளைவாகவே இன்று இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. அபிவிருத்தி அரசியல் ஊடாகவே இதனை எம்மால் சாதிக்க முடிந்துள்ளது.

இந்த அபிவிருத்தி அரசியலுக்கு மக்களின் ஒத்துழைப்புகள் பூரணமாக கிடைக்கின்ற போது எம் மக்கள் இன்னும் அடைய வேண்டிய ஏராளமான இலக்குகளை விரைவாக அமைத்து விடலாம்.

கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பில் மக்களும், மக்கள் அமைப்பு பிரதிநிதிகளும் தொடர்ந்தும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

நாம் எமது எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும். இந்த உலகில் ஏனைய மக்கள், சமூகங்கள் அனுபவிக்கின்ற எல்லா வாய்ப்புகளும் எமது எதிர்கால சநததியினருக்கு பெற்றுக கொடுகக வேண்டும்.

நாம் அபிவிருத்தியின் பயன்களை அனுபவிக்காத மக்களாக வாழ்ந்துவிட்டோம். ஆனால், எமது எதிர்கால சந்ததியினருக்கும் அந்த நிலைமைகளை விட்டுச் செல்லக்கூடாது.

அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலததை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எம் அனைவரின் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், கிளிநொச்சி கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் தயாறூபன், சோஆ நிறுவன திட்ட இணைப்பாளர் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சிரமதான நிகழ்வு



கைதடி கலைவாணி வ ,தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டியி ன முன்னிட்டு கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தி ,ா சங்கம், விளையாட்டுக்கழகம், இளைஞர்கழகம், மற்றும் பழையமாணவர்கள் இணைந்து பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்வதனைக் காணலாம். (51)

# தெளிவூட்டல் கருத்தரங்கு

(கைதடி)

தேசிய உற்பத்தி திறன் விருதுகள் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையும் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் 2012 -2013 ஆம் ஆண்டுக்குரிய விருதுகள் தொடர்பாக விளக்கமளித்தல் நடைபெறும். (90)





# ரெய்லர் சதம்

## தொடரை வென்றது நியூசிலாந்து

(ஹமில்டன்)

ரெய்லரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஹமில்டன் ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றிக் கொண்டது.

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் நீக்கப்பட்டு, பின்னி, அம்பதி ராயுடு ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக நட்சத்திர வீரர் ஹோலி, ரோகித் சர்மா ஆகியோர் களமிறங்கினர். பெரும் எதிர்பார்க்கப்பட்ட ஹோலி இரண்டு ஓட்டங்களில் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து களமிறங்கிய ரஹானேயும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ராயுடு சிறிது நேரம் தாக்குப்பிடித்தார். மறுமுனையில் பொறுமையாக ஆடிய ரோகித் சர்மாவும் வெளியேற்றப்பட்டார். இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது. இந்நியையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த டோனி, ஜடேஜா இணை அணியின் நிலையை உணர்ந்து அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி இறுதி வரை களத்தில் நின்று 127 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்துவிக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டோனி 73பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக79, ஜடேஜா 54 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் ரோகித் சர்மா 79, ஏ. ராயுடு 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சௌத்தி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 279 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 51 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்லர், வில்லியம்ஸன் இணை இந்தியப் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்து ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி 130 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய கப்டன் மக்கலம் ஒரு முனையில் அதிரடியில் கலக்க, மறுமுனையில் சதமடித்து அசத்திய ரெய்லர் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் நியூசிலாந்து அணி 48.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரெய்லர் 127 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். ஒரு நாள் அரங்கில் ரெய்லர் பெற்றுக் கொண்ட ஒன்பதாவது சதமாக இது அமைந்தது. மற்றும் வில்லியம்ஸன் 60, குப்ரில் 35, மக்கலம் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்லர் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் நியூசிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் வெலிங்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.சி.சி.யின் செயற்குழுக் கூட்டம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இரண்டு 2 நாள் செயற்குழுக் கூட்டம் டுபாயில்நேற்று ஆரம்பமானது. ஐ.சி.சி. வருமானத்தில் அதிக சதவீத பங்கு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவில் ஐ.சி.சி. சர்வதேச போட்டியை நடாத்துவது மற்றும் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது உட்பட பல்வேறு அம்சங்கள் கொண்ட புதிய சட்ட முன்வரைவுக்கு இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும். இதே வேளை இதில் விவாதிக்கப்பட்ட முடிவுகள் இன்றைய தினம் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓய்வுக்கான விளக்கம்



(லண்டன்)

அணியின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதை உணர்ந்ததன் அடிப்படையிலேயே சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விலகும் முடிவை எடுத்தேன் என இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்துள்ளார்.

எனது பந்துவீச்சு மிக மோசமாக இருந்ததாக உணர்ந்திருந்தேன். முன்னைய காலங்களில் பந்துவீசும் போது பந்துவீச்சில் ஏராளமான வித்தைகளைச் செய்து, அநேகமான துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாறச் செய்யக்கூடியதாக இருந்தது.

எனினும் இந்த ஆஷஸ் தொடரின் ஆரம்பத்திலிருந்து, பயிற்சிப் போட்டிகளிலேயே என்னால் சிறப்பாகப் பந்து வீச முடியவில்லை. முழங்கை சத்திர-சிகிச்சையின் பின்னர் எனது பந்துவீச்சுப் பாதிக்கப்பட்டதாக உணர்கின்றேன். ஆனால் இந்தத் தொடரின் போது அது மோசமடைந்திருந்தது.

அடிலெய்ட் போட்டியில் அவுஸ்ரேலியாவின் 11ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரர் எனது பந்துவீச்சில் ஆறு ஓட்டங்களை அடிக்கும் போதே அணியின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதை உணர்ந்து கொண்டேன். அணிக்கு எந்தவிதத்திலும் உதவியிருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நடாலின் ஆட்ட நுணுக்கம் வியப்படையும் சாம்ராஸ்

(மெல்பேர்ன்)

ரென்னிஸ் அரங்கில் நடால் வியத்தகு வீரர். அவருடைய ஆட்ட நுணுக்கத்தைப் பார்க்கும்போது எனக்கே வியப்பாக உள்ளது என அமெரிக்காவின் முன்னாள் ரென்னிஸ் நட்சத்திரம் பீட் சாம்ராஸ் தெரிவித்துள்ளார்.

நடாலின் ஆட்டம் நம்ப முடியாத வகையில் பிரமிப்பாக இருக்கிறது. அவர் பந்தை திருப்பி அனுப்பும் விதம் அபாரமாக உள்ளது.

இதுமாதிரி நான் இதற்கு முன்பு பார்த்தது கிடையாது. மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் அவர் நல்ல நிலையில் உள்ளார். பெடரரின் 17 கிராண்ஸ்ட்ஸ்லாம் பட்ட சாதனையை நடால் முறியடிப்பார்.

பெடரர் இனி 5 செட் ஆட்டத்தில் நடாலை தோற்கடிக்க முடியாது என்றே கருதுகிறேன். வாவ்ரிங்கா தான் அவருக்கு சவாலாக இருப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## குக் விலகல்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரில் விலகவுள்ளதாக இங்கிலாந்து அணியின் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று ருவென்ரி-20 போட்டித் தொடர்களில் பங்குகொள்ளவுள்ளது. இத்தொடர் பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இத் தொடரிலிருந்து விலகவுள்ளதாக கப்டன் குக் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடர் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள நிலையில் அணித் தலைவரான ஸ்ரூவெர்ட் புரொட், பயிற்றுவிப்பாளரான ஆஷலி ஜைஜல்ஸ் இருவரும் சிறந்த உறவை ஏற்படுத்த உதவும் பொருட்டு இந்தத் தொடரில் பங்குபற்றாமல் விடத் தீர்மானித்துள்ளேன். இது சுயநலமான முடிவு அல்ல. அணியின் நலன் கருதியும், ஒரு சிறிய ஓய்வை எடுக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த முடிவு எடுத்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

# கௌசல் சில்வா கன்னிச் சதம் இலங்கை அணி முன்னிலை

(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான டாக்கா டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முன்னிலைபெற்றுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்று வருகின்றது.



விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. சிறப்பாக ஆடிய கருணாரட்ன, கௌசல் சில்வா இணை முதல் விக்கெட்டுக்காக 117 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார கௌசல் சில்வாவுடன் இணை பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை மிக இலகுவாக எதிர் கொண்டு ஓட்டங்களைக் குவித்து வந்தது. ஒரு முனையில் நிதானமாக ஆடிய கௌசல் சில்வா கன்னிச் சதமடித்து அசத்தினார். இந்த ஜோடி 155 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சதமடித்து அசத்தி கௌசல் சில்வாவும் ஆட்டமிழந்தார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 375 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கௌசல் சில்வா 244 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 16 பவுண்டரிகள் அடங்கலாக 139, சங்கக்கார 182 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 75, கருணாரட்ன 33, சண்டிமால் இரண்டு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்லாக 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மஹேல ஜெயவர்த்தன ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன் மூன்று, அல் அமின் உசைன், ஹஜி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 143 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# பற்றிக்ஸ் கல்லூரியின் வீதியோட்டம் வெற்றியீட்டியோர் விபரம்



(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு கடந்த ஆறாம் திகதி வீதியோட்டம் நடைபெற்றது. அதிபர் ஜேறோம் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஏராளமான வீரர்கள் பங்குகொண்டனர். கல்லூரி முன்றலில் ஆரம்பமான இவ் வீதியோட்டம் மீண்டும் கல்லூரி முன்றலை வந்தடைந்தது. இதில் முதல் பத்து இடங்களைப் பிடித்தோர் விபரம் வருமாறு:

இதில் முதலிடத்தை ஏ. ஜெனற், இரண்டாமிடத்தை ஆர்.என். கின்ஸ்ரன், மூன்றாமிடத்தை ஜே. ஜெரின், நான்காமிடத்தை எஸ். தியோன், ஐந்தாமிடத்தை டிலுஷன், ஆறாமிடத்தைடிலக்ஷன், ஏழாமிடத்தை அன்ரனி சுரேஷ், எட்டாமிடத்தை எம். ஜக்ஷன், ஒன்பதாமிடத்தை ஆர். ஜசிந்தன், பத்தாமிடத்தை எஸ். ஹஸ்ரோ பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, இக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மயூரன், ஜனந்தன் சகலதுறையில் ஜொலிப்பு மகாஜனக் கல்லூரி இனிங்ஸ் வெற்றி

(தெல்லிப்பளை)

மயூரன், ஜனந்தன் ஆகியோரின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்குமிடையிலான ஆட்டம் கடந்த வாரம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி மயூரனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மகாஜனக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் 90, ஜனந்தன் 37, டிலோசன் 30, பவன் 23, ரிசோத் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி ஜனந்தனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சகல வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜனந்தன் ஆறு, மயூரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 203 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் பலோன் முறையில் மீண்டும் துடுப்பாட மகாஜனக் கல்லூரியினால் பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுன் 24 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் எஸ். குஜந்தன் மூன்று, மயூரன், ஜனந்தன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (93)

# இல்ல மெய்வல்லுநர் இன்று

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சண்முககுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப்பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரும் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்துமாறு வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் கேட்டுள்ளார். (எஸ்.பி.)

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மகா வித்தியாலய அதிபர் கே.பி. கிறிஸ்தோபிள் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட், திருமதி நளாயினி ஆனோல்ட், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. அருணகிரிநாதன், கௌரவ விருந்தினர்களாக அருட்தந்தை ஆர்.எச். சண்முகநாயகம், முன்னாள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ். ரூபசிங்கம், பாடசாலை பழைய மாணவர் ஏ. மோகன் வின்சேட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்.பி.)

# நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சென். பெனடிற் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் தேவாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி, பங்குத்தந்தை அருட்திரு ஆர்.சி.எக்ஸ். நேசராசா, சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், ஆர்வலர்களை தவறாது கலந்து கொண்டு சிறார்களை உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், இதற்கான தொடர் பயிற்சிகளில் வீர,வீராங்கனைகள் ஈடுபட்டு வருவதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# இன்று வீதியோட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு இன்று காலை. 6.00 மணிக்கு வீதியோட்டம் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் மணிசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வீதியோட்டம் கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி, கல்லூரி முன்றலிலேயே நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெறவுள்ள இவ்வீதியோட்டத்தில் வெற்றியீட்டுவோருக்கு போட்டி முடிவில் பரிசில்கள் வழங்கப்படும் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இல்ல மெய்வல்லுநர் போட்டி விரைவில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார். (93)

# அரையிறுதியில் ஜொலிஸ்ரார், சென்றலைஸ் புளூஸ்

(யாழ்ப்பாணம்)

அங்கத்துவ அணிகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஜொலிஸ்ரார், சென்றலைஸ் புளூஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்தும் அங்கத்துவ அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜொலிஸ்ரார் அணி போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இறுதியில் 76:41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத்தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதியில் முல்லைத்தீவு மாவட்ட தெரிவு அணியும் சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் மோதியது.

இதில் சென்றலைட்ஸ் புளூஸ் அணி 83:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தெரிவானது. ஏனைய இரு காலிறுதிப் போட்டிகளும் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48, 93)

# மட்டுவில் மோகனதாஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்

(சாவகச்சேரி)

ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுப் போட்டிக்கு மட்டுவில் மோகனதாஸ் அணி முன்னேறியுள்ளது.

சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் மின்னொளியில் நடைபெற்று வருகின்றுது.

சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், குமரன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மட்டுவில் மோகனதாஸ் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (48)

# விரைவில் மட்டுவில் வளர்மதியில் பிரதேச மட்ட கால்பந்தாட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் ஆண், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடர் எதிர்வரும் 1,2ஆம் திகதிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தருமாறும், போட்டி அட்டவணைக்கு ஏற்றவாறு ஆட்டங்கள் நடைபெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஏனைய போட்டிகளுக்கான நிரலிடல் இடப்பட்டு போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேபோன்று ஆண், பெண்களுக்கான எல்லேப் போட்டி கடந்த 25ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் இதில், ஆண்கள், பெண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# இந்திய தேசிய கட்சிகள் கண்டுகொள்ளாத இலங்கைத் தமிழர் பிரச்சினை

- எம். காசிநாதன் கட்டுரையிலிருந்து.



தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு கூட்டணி அமைவதே சிக்கல் என்ற நிலையில் அக்கட்சி இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியோ, தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றியோ அதன் பிரகடனத்திலோ, அரசியல் தீர்மானங்களிலோ எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை. ஆனால் பா.ஜ.க.விற்கு அப்படியில்லை. தமிழ்நாட்டில் வைகோ, விஜயகாந்த், டாக்டர் இராமதாஸ் ஆகியோருக்கு வலை வீசி காத்திருக்கிறது. இலங்கைத் தமிழர் விஷத்திலும், மீனவர்கள் விஷயத்திலும் காங்கிரஸை விட பா.ஜ.க. வித்தியாசமான கட்சி என்று பிரசாரம் மேற்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக வைகோ இதை திரும்பத் திரும்ப சொல்லி வருகிறார். ஆனால் இப்போது வெளிவந்துள்ள பா.ஜ.க.வின் அரசியல் தீர்மானத்தில் இது பற்றி இலங்கை அரசின் மீது கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால் "இந்தியாவிற்கும், இலங்கைக்கும் நீண்ட கால நல்லுறவு இருந்தது. அது இந்த அரசால் இரு நாடுகளுக்கு இடையில் அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டது" என்று பா.ஜ.க.வின் தலைவர் ராஜ்நாத் சிங் தன் பேச்சிலேயே சுட்டிக்காட்டியுள்ளார். அதே போல் பா.ஜ.க.வின் தீர்மானத்தில், "இலங்கைப் படைகளால் தொந்தரவுகள் இருந்தால், தமிழக மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்" என்று மட்டுமே கூறியிருக்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுகிறார்கள் என்று போராட்டம் நடத்தும் பா.ஜ.க., தன்னுடைய அரசியல் தீர்மானத்திலே அது பற்றி கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை. "ஏதேனும் தொந்தரவுகள் இருந்தால்" என்று கூறி, அந்த விவகாரத்தையே பிசுபிசுக்க வைத்துள்ளது.

இது மட்டுமல்ல. இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேசும் போது அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங், "இலங்கையில் உள்ள தமிழர்களின் நலனை காக்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தூதரக முயற்சிகள் தோற்று விட்டன" என்று இந்திய அரசைச் சாடுவதோடு நிறுத்திக் கொண்டு விட்டது. ஆகவே இதுமாதிரி சூழ்நிலையில் வைகோ, இராமதாஸ், விஜயகாந்த் போன்றோர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. வித்தியாசமான கட்சி என்று எதை வைத்து பிரசாரம் செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

அதே நேரத்தில் தமிழகத்தில் கூட்டணிக் கட்சிகள் வேண்டும் என்பதற்காக தங்கள் கட்சியின் வெளியுறவுக் கொள்கையில் "தியாகம்" செய்யத் தயாராக இல்லை என்பதே பா.ஜ.க. தலைவர்களின் பேச்சும், அரசியல் தீர்மானங்களும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் இந்த முறை வித்தியாசமாக இருக்கிறது. காங்கிரஸின் மீது ஊழல் புகார்கள், மோசமான நிர்வாகம் போன்றவற்றை சுமத்தி அவர்களுக்கு விடை கொடுத்து விட பா.ஜ.க. முனைகிறது. அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட "பா.ஜ.க. மதவாத கட்சி" என்ற பிரசாரத்தையே தூக்கிப் பிடிக்கிறது காங்கிரஸ் கட்சி. இக்கட்சியின் தலைவர்களான சோனியா காந்தியோ, ராகுல் காந்தியோ "ஆட்சியின் சாதனைகளை" முழு வீச்சில் கொண்டு போய்ச் சேர்த்து வாக்குக் கேட்க தயங்குவது போலவே தெரிகிறது.

ஆனால் தங்களுடைய அடிப்படைக் கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய நிலைமை பா.ஜ.க.விற்கு ஐந்தாவது முறையாக நேர்ந்திருக்கிறது என்பது இந்தத் தேர்தலின் இன்னொரு தனிச்சிறப்பு.

நரேந்திரமோடிக்கு எதிராக ராகுல் பிரதமர் வேட்பாளர் என்றால் ஜெயிப்பது கடினம் என்பது காங்கிரஸ் கட்சிக்குப் புரிகிறது. அதே நேரத்தில் பிரதமர் மன்மோகன்சிங்கை முன்னிறுத்தியும் ஜெயிக்க முடியாது என்பதை உணருகிறது. அதனால்தானோ என்னவோ கடந்த பத்தாண்டு சாதனைகளைக் கூட முழு வேகத்தில் பிரசாரம் செய்யாமல் அமைதி காக்கிறது காங்கிரஸ் கட்சி. இருந்த கூட்டணிகளை விலக்கி வைத்த காங்கிரஸ் இப்போது "மதசார்பற்ற இந்தியா" என்ற நோக்கில் கூட்டணிக் கட்சிகளுக்கு வலை விரிக்கிறது.

பா.ஜ.க.வோ கூட்டணி கிடைக்காததால் "வளர்ச்சித் திட்டங்கள். ஊழல் ஒழிப்பு" என்ற நோக்கில் கட்சிகளை திரட்ட நினைக்கிறது. இருவருக்கும் இந்திய வாக்காளர்கள் என்ன மாதிரி பதிலைச் சொல்லப் போகிறார்கள் என்பதுதான் வரும் நாட்களில் தேர்தல் பிரசாரக் களத்தின் முக்கிய அம்சங்களாகத் திகழப் போகின்றன!

# காந்தி முத்திரைகள்



மகத்தான செயல்களைச் செய்தவர்களுக்கு, நாட்டின் தலைவர்களுக்கு அந்த நாடு முத்திரைகள் வெளியிடுவது வழக்கமானதுதான். ஒரு நாட்டின் தலைவருக்கு பிற நாடுகள் தபால் முத்திரை வெளியிடுவது அந்தத் தலைவருக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

அந்த வகையில் உலகின் பெரும்பாலான நாடுகளில் தபால்முத்திரைகள் வெளியிடப்பட்ட தலைவராக மிளிர்கிறார் மகாத்மா காந்தி.

காந்தியின் மறைவுக்குப் பிறகு, இந்தியாவின் முதலாவது சுதந்திர தினத்தின் போது (ஆகஸ்ட் 15, 1948) காந்தியின் உருவம் பொறித்த நான்கு வகையான முத்திரைகள் வெளியிடப்பட்டன.

மகாத்மா காந்திக்கு வெளியிடப்பட்ட முதல் தபால்முத்திரைகள் இவைதான்.

அதன்பிறகு, இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் முதல்முதலாக அமெரிக்கா 1961, ஜனவரி 26-ஆம் திகதி காந்தியின் உருவம் பொறித்த தபால் முத்திரையை வெளியிட்டது. அதைத் தொடர்ந்து, இரண்டாவது நாடாக 1967இல் கொங்கோ நாடு வெளியிட்டது. போலந்து நாடு முதன்முதலில் மகாத்மா காந்திக்கான தபால் அட்டையை (Postcard) வெளியிட்டது.

காந்தி பற்றிய நினைவுத் தபால் உறையை (Envelope) வெளியிட்ட முதலாவது வெளிநாடு ருமேனியா. ஜெனிவா நாட்டில் நடைபெற்ற ஒரு ஏலத்தில் காந்தியின் உருவம் பொறித்த ரூ.10 தபால்முத்திரை சுமார் இரண்டரை கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

1969இல் காந்தியின் நூற்றாண்டு கொண்டாட்டத்தின்போது 40இற்கும் மேற்பட்ட நாடுகள் காந்தியின் தபால் முத்திரைகளை வெளியிட்டன. பூட்டான் இரு முத்திரைகளையும், சோமாலியா மூன்று முத்திரைகளையும் வெளியிட்டன.

இந்தியாவில் இதுவரை 48இற்கும் மேற்பட்ட தபால் முத்திரைகளும், 200 தபால் உறைகளும் காந்தியைக் கௌரவிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன. உலகிலே 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் மகாத்மா காந்தியை கௌரவிக்கும் வகையில் அவரது உருவம்பொறித்த தபால் முத்திரைகள் வெளியிட்டு, பெருமைப்படுத்தியுள்ளன.



# மலையில் ஒரு பொழுதுபோக்கு!

ஐரோப்பாவில் உள்ள நீண்ட மலைத் தொடரான, ஆல்ப்ஸ் மலைத் தொடர், உலகின் முக்கியமான சுற்றுலா தலமாக விளங்குகிறது. இந்த மலைத் தொடரில், இத்தாலி - பிரான்ஸ் நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள, 1,200 அடி உயரமுடைய "மவுண்ட் பிளாங்" என்ற மலைச் சிகரம் தான் மிக உயரமானது. இந்த, இரண்டு மலைகளுக்கு இடையே, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, ரோப் கார் இயங்குகிறது. இதில், இரண்டு ரோப்கார்களுக்கு நடுவில், மெல்லிய கம்பியை கட்டி, அந்த கம்பியில், 196 அடி தூரம் நடந்து, சாகசம் செய்துள்ளார், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த, ஜூலியன் மில்லட் என்பவர். இது குறித்து கூறும் போது, "உயரமான இடங்களில், கம்பியில் நடப்பது தான் என் பொழுதுபோக்கு. இதற்கு முன், பல அடி உயரமுள்ள இடங்களில் நடந்துள்ளேன். ஆனாலும், ஆல்ப்ஸ் மலை அனுபவமே தனி..." என்கிறார் அவர்.

# காது கேட்க... செல்போன்!

காது கேட்கும் கருவியை ஒருவர் காதில் வைத்திருப்பதைப் பார்த்தவுடனேயே நமக்குத் தெரிந்துவிடும் அவருக்குக் காது கேட்கும் திறன் குறைவு என்று. இதனாலேயே காது கேட்பதில் பிரச்சினை உள்ள பலர், அந்தக் கருவியை வாங்கிப் பயன்படுத்தக் கூச்சப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

இப்போது வந்துள்ள ஒரு புதிய கருவியால் இந்தப் பிரச்சினை தீர வழியேற்பட்டிருக்கிறது. அவர்களைப் பார்க்கும் யாரும் செல்போனில் அவர்கள் பாட்டுக் கேட்டுக்கொண்டு இருப்பதாகத்தான் நினைப்பார்கள். ஆனால் அவர்கள் அந்த நேரத்தில் காது கேட்கும் கருவியைப் பயன்படுத்திக் கொண்டு இருப்பார்கள்.

இதுவரை நாம் பார்த்திருக்கும் காது கேட்கும் கருவிகள் ஒலியை அதிகப்படுத்திக் கொடுப்பவை. 15 முதல் 20 சதவீதம் வரை காது கேட்கும் திறன் இருந்தால் இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம்.

60 வயதுக்கு மேல் உள்ள ஒருவருக்கு, காதின் கேட்கும் திறன் குறைந்து போவதற்கு வாய்ப்புகள் அதிகம். ஆனால் தனக்குக் காது கேட்கவில்லை என்பதே நிறையப் பேருக்குத் தெரிவதில்லை. காது கேளாதோருக்கு என்ன கேட்கிறது? என்பதும் தெரியாது. என்ன கேட்கவில்லை? என்பதும் தெரியாது. எனவே காது கேட்கவில்லை என்பது தெரியாததால், அவர்களாகவே மருத்துவம் பார்க்க செல்லமாட்டார்கள்.

குறைந்த அளவே காது கேட்கும் திறன் உள்ளவர்களுக்கு காது கேட்கும் கருவி போன்றவற்றைப் பயன்படுத்தி அவர்களுடைய குறைபாட்டைப் போக்கிவிடலாம். ஆனால் முற்றிலும் காது கேட்கவில்லை என்றால் காது கேட்கும் கருவி போதுமானதல்ல. அது பயன்படாது. அதற்கு காக்ளியர் இம்ப்ளாண்ட் என்ற அறுவைச் சிகிச்சை முறையைப் பயன்படுத்தி காது கேட்கச் செய்யலாம்.

இந்த முறையில் உட்காதில் ஒரு கருவியைப் பொருத்தினால், ஒலியை அந்தக் கருவி உள்வாங்கி நேரடியாக நரம்புகளுடன் ஒலிக்குத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்துவிடும். கேட்கும் திறனை உண்டாக்கிவிடும். ஆனால் இந்த அறுவைச் சிகிச்சைக்கு பல இலட்சம் ரூபா செலவு ஆகும்.

சிறிதளவு காது கேட்கும் திறன் இருந்தால் காது கேட்கும் கருவியைப் பயன்படுத்த முடியும். இதைப் பயன்படுத்துவது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியும்



# கமலைப் பிரிந்த சரிகா!



நான்கு வயதிலேயே சிறுவனாக திரைப்படத்தில் நடிக்கத் துவங்கி, திருமணத்திற்கு பின்பு விலகி, மீண்டும் நடித்த திரைப்படத்தின் மூலம் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற சரிகா, நீண்ட இடைவெளிக்கு பின்னர் "கிளப் 60" மூலம் திரைக்கு வந்திருக்கிறார். அவர், தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்த ஏற்ற இறக்கங்களைப் பற்றி பகிர்ந்து கொண்டதிலிருந்து...

சரிகாவின் தந்தை ஒரு புகைப்படக் கலைஞர். இவருக்கும் ரஜ்புத் இனத்தைச் சேர்ந்த தாய்க்கும் பிறந்த ஒரே மகள் சரிகா. "ஃபிலிம்பேர்" பத்திரிகை நடத்திய போட்டியொன்றுக்கு சரிகாவின் புகைப்படத்தை அனுப்பினார் அவரது தந்தை.

தேர்வு செய்யப்படாத அந்தப் புகைப்படத்தை பார்த்த பத்திரிகையாளர் ஒருவர், பிரபல தயாரிப்பாளர் பி.ஆர்.சோப்ரா அவரது படத்தில் நடிப்பதற்காக குழந்தை நட்சத்திரமொன்றை தேடிக் கொண்டிருப்பதை அறிந்து புகைப்படத்தை அவருக்கு அனுப்பி வைத்தார். அப்போது சரிகாவின் வயது நான்கு.

அந்தப் படத்தில் சிறுவனாக நடித்தார் சரிகா. அந்தப் படம் முடிவடைவதற்குள் சரிகாவின் பெற்றோர் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்துவிட்டனர். கணவர் பிரிந்ததால் வருமானமின்றி சிரமப்பட்ட சரிகாவின் தாய், சரிகாவைத் தொடர்ந்து சினிமாவில் நடிக்க வைப்பதன் மூலமாகவே வாழ்க்கையை நடத்த முடியுமெனக் கருதினார். வற்புறுத்தி நடிக்க வைத்தார்.

பதின்மூன்று வயதுவரை சிறுவன் வேடத்திலேயே நடித்து வந்த இவர், உடலில் ஏற்பட்ட பருவ மாற்றங்களால் தொடர்ந்து நடிக்க முடியவில்லை. பருவமடைந்த பிறகு அதிர்ட்டகரமாக இவரது இரண்டு படங்கள் பெரும் வெற்றி பெறவே திரையுலக வாழ்க்கை தொடர்ந்தது. ""கீத் காத்தா சல்""(1975) படத்தின் மூலம் கதாநாயகி அந்தஸ்துக்கு உயர்ந்தார். புகழும் வருமானமும் அதிகரித்தது.

தன்னைத் துன்புறுத்திய தாயிடமிருந்து பிரிந்து வீட்டைவிட்டு வெளியேறினார். தனக்கென்று ஒரு பங்களாவை சொந்தமாக வாங்கியவர், பின்னர் ஏழு பங்களாக்களின் உரிமையாளர் ஆனார். எதையுமே சரிகாவால் தனித்துச் செய்ய முடியாது என்று கருதிய அவரது தாயின் எண்ணத்தை தகர்த்து தனியாக தன்னாலும் சாதிக்க முடியுமென்பதை நிரூபித்தார். அப்போதுதான் அவருடைய மனதில் காதல் அரும்பியது.

"கீத் காத்தா சல்" படத்தைத் தொடர்ந்து அதில் கதாநாயகனாக நடித்த சச்சினுடன் தொடர்ந்து பல படங்களில் நடித்ததால் இருவருக்கும் காதல் மலர்ந்ததாகப் பத்திரிகைகள் எழுதின. "பச்சை நிற கண்கள்" மீது தனக்கும் காதல் ஏற்பட்டது உண்மை என்று பத்திரிகை பேட்டியொன்றில் சச்சின் கூறினாலும், சரிகா அதை மறுத்தார்.

பின்னர் கிரிக்கெட் உலகில் மிகவும் பிரபலமாக இருந்த கபில்தேவ், சரிகாவுக்குப் பொருத்தமானவர் என்று நடிகர் மனோஜ்குமார் தம்பதிகள் கருதியதால் இவர்கள் இருவரையும் சந்திக்க ஏற்பாடு செய்தனர். சரிகா சண்டிகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு கபில்தேவ் குடும்பத்தினரைச் சந்தித்துப் பேசி முடிவெடுத்த நிலையில் கபில்தேவ், தான் ரோமியை காதலிப்பதாகக் கூறி பின்வாங்கினார்.

ரோமியுடன் அப்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே சரிகாவைச் சந்திக்க ஒப்புக் கொண்டதாகவும் தற்போது எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டுவிட்டதால் ரோமியை திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும் கபில்தேவ் கூற, சரிகா இடிந்து போனார்.

இதன் பின்னர்தான் கமல்ஹாசன் சந்திப்பு ஏற்பட்டது. ஏற்கெனவே தமிழ்த் திரையுலகில் புகழ் உச்சியில் இருந்த கமல்ஹாசன் இந்தி திரையுலகிலும் "சாகர்" படத்திற்கு பின்னர் கால் பதிக்க முயற்சித்துள்ளார். அவரது முதல் திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக, கமல் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்த நேரத்தில் அந்தப் பெண் தான் தானென்றும் அந்த தகவல் உண்மையென்றும் சரிகா வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்.

இந்த உறவின் விளைவாக சரிகா கர்ப்பமடைந்தபோது இருவருமே திருமணம் செய்து கொள்ளவில்லை. மீண்டும் இரண்டாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ள விரும்பிய சரிகா, இரண்டாவது பிரசவத்திற்கு பிறகே கமலைத் திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் நடிப்பதை விட்டுவிட்டு, தமிழ் கற்றுக் கொண்டு கமல் படங்களுக்கு உடை வடிவமைப்பாளராக சென்னையில் புதிய வாழ்க்கையைத் தொடங்கினார். இவர்களது வாழ்க்கை ஓர் அருமையான காதல் கதை என்று "சிமி கேரவல்" நடத்திய டெலிவிஷன் நிகழ்ச்சி ஒன்றில் ஒளிபரப்பப்பட்டது.

பின்னர் எப்படி இவர்கள் திருமண உறவு முறிந்தது?

கமலுக்கு வேறொரு நடிகையுடன் தொடர்புள்ளதாகப் பத்திரிகைகள் எழுதின. முதல் திருமண முறிவுக்குப் பின்னர், மீண்டும் தனக்கொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பிய நடிகை கவுதமிக்கு உதவ கமல் நினைத்ததால் சரிகாவின் உறவு அவருக்குத் தேவைப்படவில்லை. சரிகா வெளியேறினார். அப்படி வெளியேறுவதற்கு பெரும் தொகையை சரிகா கேட்டதாகப் பத்திரிகைகள் எழுதின. மும்பைக்குத் திரும்பிச் சென்றார் சரிகா.

43வது வயதில் நஸ்ருதின் ஷாவுடன் "பர்ஸானியா"வில் நடிக்க ஒப்பந்தமானார். மேக் அப் ஏதுமின்றி சாதாரண பருத்தி ஆடையணிந்து அவர் நடித்த அந்தப் படம் சிறந்த நடிகைக்கான தேசிய விருதை சரிகாவுக்கு பெற்றுத் தந்தது.

தற்போது 52 வயதாகும் அவர் மீண்டும் படங்களில் நடிக்கத் தொடங்கியுள்ளார். இன்றைய தினத்தில் அருமையாகத் தோன்றுவது என்னுடைய வேலையும் என்னுடைய பெண்களும்தான். அதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

ஸ்ருதியைப் பொறுத்தவரை வர்த்தகரீதியாக அவரது படங்கள் வெற்றி பெறுகின்றன. அக்ஷரா இப்போதுதான் பால்கியின் படத்தில் நடிக்கத் தொடங்கியுள்ளார். என்னைப் பொறுத்தவரை நான் யாருக்கும் யோசனை கூறுவதில்லை. அவரவர்களுக்கு அவரவர் வேலை. ஒருவரது மரணம் வரை எதுவுமே முற்றுப் பெறுவதில்லை என்பதை நம்புகிறேன். அதன் பின்னரும் ஒரு முடிவு இருக்கிறதா? என்பது சந்தேகம் தான்" என்கிறார் கமலின் முன்னாள் மனைவி.

# எழுத்தாளர்களும் படைப்புகளும்




- அரிஸ்ரோட்டில் எழுதிய படைப்புகளில் சுமார் 50 தொகுப்புகள் அதிர்ஷ்டவசமாக அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளன. கி.மு.80ஆம் ஆண்டில் பள்ளத்திற்குள் தூக்கியெறியப்பட்டிருந்த அவரது படைப்புகளை ஆசியாவிற்குள் ஊடுருவி வந்த ரோமானிய படையினர் கண்டெடுத்து தங்கள் படைத் தளபதி கல்லாவிடம் கொடுக்க, அவற்றை ரோம் நகருக்கு கொண்டுசென்ற கல்லா, மறுபிரதிகள் எடுக்க வைத்தாராம்.

- அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதியாக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட் (1901-1909) 40 புத்தகங்கள் எழுதியுள்ளார். ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே The Naval war of 1812 என்ற முதல் புத்தகத்தை எழுதினார்.

- போப் ஆண்டவரின் ஆசியைப் பெற்ற முதல் கற்பனை நாவல் எது தெரியுமா? 1880 ஆம் ஆண்டு ஜெனரல் லீ வாலஸ் எழுதிய "பென்ஹர்" என்ற நாவலாகும்.

- ரூத் யார்ட் கிப்ளிங், தன்னுடைய குழந்தையை அன்புடன் கவனித்துக் கொண்ட பணிப்பெண் ஒருத்திக்கு புத்தகமொன்றை எழுதி அன்பளிப்பாகக் கொடுத்ததோடு, அவளுக்குப் பணம் தேவைப்படும்போது நல்ல பதிப்பாளரிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ளவும் அனுமதியளித்திருந்தார். பல ஆண்டுகள் கழித்து அவளுக்குப் பணத் தேவை ஏற்பட்டபோது கிப்ளிங் தன்னிடம் அளித்த "ஜங்கிள் புக்" என்ற புத்தகத்தை விற்றதன் மூலம் அவளது வாழ்நாள் முழுவதும் வசதியாக வாழும் அளவிற்குப் பணம் கிடைத்தது.

- வோல்ட் விட்மன் எழுதிய Leave of Grass என்ற புத்தகத்தின் ஒரு பகுதியை மட்டுமே படித்துப் பார்த்த அவரது மேலதிகாரி ஜேம்ஸ் ஹார்லன். மக்கள் மனதைக் கெடுக்கும் விதமாக கவிதை எழுதுவதாக காரணம் காட்டி அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

- பெர்சி ஷெல்லி, ஜோர்ஜ் பைரன், ஜோன் வில்லியம் போலியாரி, மேரி வுல்ஸ்டோன் கிராப்ட் ஆகிய நால்வரும் விடுமுறையைக் கழிப்பதற்காக சுவிட்சர்லாந்து சென்றிருந்தனர். எல்லோரும் ஒரு பேய்க் கதை எழுதவேண்டும் என்று அவர்களுக்குள் ஒரு போட்டி எழுந்தது. முதல் மூவரும் எழுதத் தொடங்கி முடிக்க முடியாமல் பின்வாங்க, 18 வயதான மேரி வுல்ஸ்டோன் மட்டும் முழுமையான நாவலொன்றை எழுதி முடித்தார். இரண்டாண்டுகள் கழித்து 1818ஆம் ஆண்டு அவரது கணவர் ஷெல்லி முகவுரையுடன் அந்த நாவலை வெளியிட்டபோது பெரும் வரவேற்பைப் பெற்றது. அந்த நாவல்தான் Doctor Frankenstein.

- ஆண்டுக்கு நான்கு நாவல்கள் மற்றும், வாரந்தோறும் பத்திரிகைகளில் தொடர் பத்திகள் என பரபரப்பாக எழுதிவரும் இந்திய எழுத்தாளரான ஷோபாடே, தனக்கு இன்ஸ்பிரேஷனாக தோன்றும் மனிதர்களைப் பற்றி அவ்வப்போது ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொள்வாராம். பின்னர் அதிலிருந்து எழுதுவாராம்.

- விடியற்காலை 4.30 மணிக்கெல்லாம் விழித்தெழும் குஷ்வந்த் சிங், காலை செய்திகளைக் கேட்ட பின்னர் மூன்று மணி நேரம் எழுதும் பழக்கமுடையவர்.

என்பதால், காது கேட்கும் திறன் குறைவாக உள்ளவர்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்தத் தயங்குவார்கள்.

இப்படிப்பட்டவர்களின் பிரச்சினையைத் தீர்க்க, விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வெளியிட்டிருப்பதுதான் செல்போன் மூலம் காது கேட்கும் கருவியைப் பயன்படுத்தும் முறை. எளிமையாகச் சொன்னால், செல்போனுக்குள் காது கேட்கும் கருவியைப் புகுத்தியிருக்கிறார்கள்.

பிற குறைபாடுகளைப் போலத்தான் காது கேளாமையும். இதனால் தாழ்வு மனப்பான்மைக்குள்ளாகி, பிறரிடம் இருந்து தனிமைப்பட்டு, தன்னைப் பற்றி பிறர் ஏதாவது பேசிக் கொண்டிருக்கிறார்களோ? என்று சந்தேகப்பட்டு, வாழ்வைத் துயர் நிறைந்ததாகப் பலர் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். செல்போன் மூலம் கேட்கும் திறனை அதிகப்படுத்திக் கொள்ளும் இந்தப் புதிய முறையால், யாருக்குக் காது கேட்கும்? யாருக்குக் காது கேட்காது? என்று இனிமேல் யாருக்குமே தெரியாது.

# துருப்பிடித்து சேதமடையும் குடிநீர் விநியோக உழவு இயந்திரம்




(முழங்காவில்)

பூநகரிக் கோட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக "வேட் விசன்" நிறுவனத்தால் 40 இலட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்ட உழவு இயந்திரமும், நீர் பவுசரும் கடந்த ஆறுமாதத்துக்கு மேலாக சாரதி இன்மையால் இயங்கா நிலையில் மரநிழலில் நிறுத்தப்பட்டு துருப்பிடித்து சேதமடைவதாக பாடசாலை சமூகத்தினரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி கோட்டக்கல்விப் பணிபாளரூடாக பூநகரி மத்திய கல்லூரிக்கு வழங்கப்பட்ட பவுசருக்கு தற்காலிகமாக ஒரு சாரதி நியமிக்கப்பட்டபோதும் அவருக்கு மிகக்குறைந்த வேதனம் வழங்கப்பட்டமையால் அவர் சேவையிலிருந்து விலகிக் கொண்டார்.

கடந்த ஆறு மாதங்களாகியும் உரியவர்கள் சாரதியை நியமித்து பாடசாலைகளுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லையென பாடசாலை சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என கேள்வி எழுப்பியுள்ளனர். (112)

# பேருந்துகளில் திருட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு சேவையிலீடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகப் பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் கைத்தொலைபேசி மற்றும் பணப்பை போன்றவையே இவ்வாறு திருட்டுப்போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திப்பதுடன் பணப்பை, பயணப்பை மற்றும் கைத்தொலைபேசிகளை எடுத்துச் செல்வதில் அச்சமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் தாம் பயணத்தின்போதும் எச்சரிக்கையாக நடந்து கொள்வதாகவும் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (85)

# விற்பனை நிலையம் திறப்பு

யூ.என்.டி.பி நிறுவனத்தால் பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்காக முழங்காவிலில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு உற்பத்தி விற்பனை நிலையம் இன்று பி.ப 3 மணிக்கு நோர்வே தூதுவரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

முழங்காவிலில் உள்ள பால்பண்ணையாளர்களுக்கு இந்நிலையம் திறந்து வைக்கப்படுவது பெரும் வரப்பிரசாதமாக அமையுமென கூட்டுறவாளர்கள் தெரிவிக்கின்றனர். (112)

# நெடுங்கேணிப் பகுதியில் இடம்பெறும் தந்திரமான கால்நடைக்களவு

நெடுங்கேணி பகுதியில் கால்நடைகளை வியாபாரியினால் கொள்வனவு செய்து கொண்டு செல்லும்போது கால்நடைகள் களவாக கொண்டு செல்லப்படுவதாக கால்நடை உரிமையாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி, மருதோடை, கற்குளம், பட்டிக்குடியிருப்பு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் ஒருசில கால்நடை உரிமையாளர்களால் இரவு வேளைகளில் வெளிமாவட்ட வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுவதினால் இதற்குள் களவாக கால்நடைகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இது தொடர்பாக அனுமதி வழங்கும் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து உரிய முறைக்கு கால்நடை உரிமையாளர் சங்கத்தில் இருந்து அனுமதிக்கப்பட்ட பின் அதற்கான அனுமதி வழங்கப்படும்போது இதில் இருந்து களவாகக் கொண்டு செல்லப்படும் கால்நடைகளை கட்டுப்படுத்தலாம் என கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசென்று இதற்கான தீர்வினை பெற்றுத் தரும்படி கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (10)

# அதிகரித்துள்ள நோயாளர் வருகை

(குருநகர்)

தங்கம்மா ஞாபகார்த்த குருநகர், அரச வைத்தியசாலையில் நோயாளர்களின் வருகை அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வைத்திய அதிகாரியின செயற்றிறனால் நோய்களுககுரிய மருந்து வில்லைகள் மற்றும் கழிம்புகள் காயங்களுக்கான கட்டு மருந்துகள் வழங்கபபடுவதால் மக்களின் கவனம் அங்கு திரும்பி வருவதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி மருத்துவமனையில் பிரசவ விடுதியும் இயங்கி வருகிறது. கடந்த காலங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையை நாடிச் சென்ற குருநகர், பாசையூர், கொய்யாத்தோட்டம், சுண்டுக்குழி, ஈச்சமோடைக் கரையோரப் பகுதி நோயாளர்கள் குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த அரசினர் வைத்தியசாலையை நாடிச் செல்வதால் தினமும் நோயாளர்களின் நெருக்கடி ஏற்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (68)

# கருணையின் இருப்பிடமானவர் மகாத்மா காந்தியடிகள்.



**மகாத்மா காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்ததினம் நாளை கொண்டாடப்படவுள்ளது.**

அன்பாலும் கருணையாலும் தூண்டப்பெற்று கடைசிவரை மக்களுக்காக வாழ்ந்த மகாத்மா என்றால் அது காந்திய டிகள் தான்.

பாரதத்தின் விடியலுக்காக போராடிய மகாத்மா காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்ததினம் நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அவரது சிரார்த்ததினத்தை முன்னிட்டு அவர் பற்றிய நினைவுப் பகிர்வாக இது அமைகிறது.

அன்பாலும் கருணையாலும் தூண்டப்பெற்று கடைசி வரையிலும் மக்கள் பணியைச் செய்துவந்தவர் காந்தி. மக்கள் பிரச்சினைகளைக் கேட்கும் போது சாமானிய நிலைக்கு இறங்கி வந்து அவர்கள் நிலையில் நின்று அவர்க ளோடு பேசுவார்.

தனது பெரும் பணிகளுக்கிடையில் இதற்கென்று பொழுது ஒதுக்கி பெரும் ஈடுபாட்டுடன் மக்களுக்கு அறிவுரை கூறுவார். இதனால் அவர் எல்லா மக்களாலும் விரும்பப்படும் ஒருவராக மாறினார்.

காந்தி ஒரு புரட்சிச் சிந்தனையாளர். எதிர்காலத்தை ஊடுருவி வெகு தூரம் பார்த்து அதற்கு வேண்டியவைகளைச் சிந்தித்து செயற்படுத்தும் திறன் அவரிடம் இருந்தது. அவர் புதுயுகத்திற்கு ஒத்ததாக சுயராஜ்யம் என்ற கருத்தை உருவாக்கினார்.

சுயராஜ்யக் குறிக்கோள் கைக்கெட்டிய பின் தன்னுடைய புதியலட்சியமாக சர்வோதயத்தை வரித்துக்கொண்டார். சர்வோதயம் என்றால் எல்லோருடையவும் உதயம். சர்வோதய சிந்தனையைச் செயலாக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

பொருளாதார ஏற்ற இறக்கங்கள், அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனங்கள், சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை எதிர்கொள்வதற்கு காந்திய தத்துவமே அடித்தளமாக அமையுமென்பது காந்தி வழி வந்த போராட்டங்களினால் எமக்குக் கிடைத்த பாடமாகும்.

காந்தியின் வழி யேசு அல்லது புத்தரின் வழியாகும். காந்தி போன்ற பெருந்தகையாளர்கள் காலத்தைக் கடந்தோர் குறுகிய காலநோக்கில் பணி செய்வோர் அல்லர். அவர்கள் தொலைநோக்குடன் பணி செய்பவர்கள்.

மனித இனம்சகல கட்டுகளிலிருந்தும் விடுபட வேண்டுமானால் அதற்குத் தேவையானது சர்வோதய வேலைத் திட்டமே என காந்தி கூறுகிறார். காந்தியைப் போற்றுகின்றவர்கள் இந்த வேலைத் திட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவைத் தரவேண்டும். காந்தியச் சிந்தனை உயர வேண்டுமானால் அகிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமூக அமைப்பு தோன்றவேண்டும்.

காந்தியின் தலைசிறந்த குணங்களில் ஒன்று அவர் சத்தியத்தை கிரகிப்பவராக சத்தியாக்கிரகியாக இருந்தார் என்பதே யாகும். அவர் எப்போதும் முன்னேற்றத்திலேயே நாட்டம் கொண்டவராக விளங்கினார்.

எப்போதும் புதிது புதிதாகக் கற்றுக் கொள்வதற்கு நாட்டம் கொண்டவராக விளங்கினார்.

நல்ல விடயங்களைக் குழந்தைகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் கூறுகிறார். காந்தியை எல்லோரும் ஒரு தலைவராக நினைத்தனர். ஆனால் காந்தியோ அதை விட்டு விடுதலையாகி பற்றற்று நின்றார்.

காந்தி சமூகத்திற்குச் சொல்லும் செய்தி அவருடைய வாழ்க்கையே 'காந்தி போன்ற ஒரு புனித மனிதருக்கெதிராக கொல்படை தாங்கிய கை எப்படி எழ முடிந்தது" என்று வினோபாவை ஒரு சகோதரன் கேட்டார். வியோபா பதில் தருகிறார்.

இது சிந்தனைக்குரிய விடயம் தான். காந்தி என்றொரு தனி மனிதன் எங்கே இருந்தார்? எல்லோர் பாரத்தையும் சுமந்தவர், நம் வாழ்க்கையில் அழுக்குச் சேர்ந்து விட்டதால் அவர் கொலையுண்டார். அவர் ஒரு தனிமனிதராக இருந்திருந்தால், நம் பொறுப்பையெல்லாம் அவர் சுமத்தியிராவிட்டால் செய்தி வேறாக இருக்கும்.

நம் எல்லோருடைய பொறுப்பைச் சுமந்து கடைசிவரை அதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஆதலால அவர் கொலையுண்டதன் பொறுபபு நம்மீதே சாரும். இயேசு கிறிஸ்துவும் மக்களுடைய பாவங்களைச் சுமந்தார். இறுதியில் தானே சிலுவை சுமந்தா.

மக் ஆர்தர் என்ற படைத்தலைவர் காந்தியின் மறைவை ஒட்டி அனுப்பிய இரங்கற் செய்தியில் "என்றாவது ஒருநாள் காந்தியின் சொல்லை உலகம் பின்பற்ற வேண்டியிருக்கும். அதைத் தவிர வழியில்லை என்று குறிப்பிட்டார். அதற்குக் காரணம் உலகம் இன்று அணு ஆயுதப்போரில் முனைப்புக் காட்டுகின்றமையே ஆகும்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**
**ஆசிரியர் காந்தீயம்.**

# உலக நீர்தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

வருடந்தோறும் மார்ச் 22 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக நீர் தினத்தை முன்னிட்டு நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபையால் ஏற்பாடு செய்யப்படும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ்நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, சுவரொட்டி மற்றும் குழுப்பாடல் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

கட்டுரை, சுவரொட்டி மற்றும் குழுப்பாடல் போட்டிகளுக்கான தலைப்புக்களாக நீர்மற்றும் வலு மற்றும் சுகாதாரம் நீர் பாதுகாப்பு நீர் தொடர்பான எதிர்காலச் சவால்கள் நீர்ப்பற்றாக் குறைக்கு முகம் கொடுப்போம் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

இரு பிரிவுகளாக நடாத்தப்படும் போட்டிகள் 8 ஆம் தரம் வரை கனிஷ்ட பிரிவாகவும் 9 ஆம் தரத்திற்கு மேல் சிரேஷ்ட பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளது. இரு பிரிவிலும் 350 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.

சுவரொட்டிகள் 17x23 அளவுடைய தாளில் உங்களுக்கு விரும்பிய நிறத்தினைப் பயன்படுத்தி வரைந்து அனுப்பப்படல் வேண்டும்.

இவ்விரு போட்டிகளிலும் தெரிவுசெய்யப்படுவோருக்கு 10 ஆயிரம் ரூபா முதல் பரிசாகவும், 7 ஆயிரத்து 500 ரூபா இரண்டாம் பரிசாகவும், 5 ஆயிரம் ரூபா மூன்றாம் பரிசாகவும் சான்றிதழ்களும் வழங்கப்படும்

குழுப்பாடல் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் 9 ஆம் தரத்திற்குமேல் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் 15 பேருக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். முதலில் தந்துள்ள தலைப்புக்களில் பாடல்களை எழுதி பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக கீழே வழங்கப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

தெரிவு செய்யப்படும் தரமான பாடல்களை அனுப்பி வைக்கப்படும் பாடசாலைகள் தாளம் அமைத்து இசையோடு கூடிய பாடலுருவாக்கி போட்டியில் கலந்துகொள்ளலாம்.

இப்போட்டிக்கு முதல் பரிசு 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதி திகதி 2014 பெப்ரவரி 28 ஆகும். சகல தொடர்புகளுக்கும் பொதுமக்கள் இணைப்புப் பிரிவு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை த.பெ.எண். 14 கல்கிசை என்னும் முகவரியுடனும் 011-2635254 அல்லது 011-2626532ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளலாம்.

உலக நீர்த்தினமான மார்ச் 22 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேசிய விழாவில் பரிசு பெறும் மாணவ மாணவிகளுக்கு பணப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# உள்ளூராட்சி வாரநிகழ்வு



(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் சிறப்பு அம்சமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் சிவராஜா தலைமையில் தமிழர்கள் இன்று தங்கள் பண்பாட்டை தக்கவைத்திருக்கின்றனர் இல்லை தவறவிட்டுள்ளனர் என்னும் தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றது.

தமிழர்கள் இன்று தங்கள் பண்பாட்டை தக்க வைத்துள்ளனர் என்னும் அணியிலே ஜீ.சஜீவன், ஏ.தினேஷ் ஆகியோரும் தமிழர்கள் இன்று தங்கள் பண்பாட்டை தவறவிட்டுள்ளனர் என்னும் அணியிலே க.உஷாந்தன், ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோரும் கலந்துகொண்டு வாதிட்டார்கள்.

(63,48)

# பாடசாலையை இயங்க வைக்க கோரிக்கை

(கொடிகாமம்)

இந்து கலாசார திணைக்[illegible]த்தில் பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் அறநெறிப் பாடசாலைகளை நடாத்த முன்வரவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரையும் ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புகளை நடாத்த முடியாது ஆனால் அந்த நடைமுறையினை மீறி தனியர்ா் கல்வி நிலையங்கள் வகுப்புகளை நடாத்தி வருகின்றனா.

பாடசாலை மாணவர்கள் ஆன்மீகத்தில் நாட்டம் செலுத்துவதற்கு அறநெறிப் பாடசாலைகள் கிராம மட்டத்தில் இயங்க வேண்டியத்து கட்டாய தேவையாகும்.

அறநெறிப்பாடசாலைகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து ஆலய நிர்வாகத்தினர் வெள்ளிக்கிழமைகளிலாவது நடாத்த முன்வரவேண்டும். வெள்ளிக்கிழமைகளில் வகுப்புக்கள் நடாத்த சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.(130)

# கைதடி முதியோர் இல்லத்தில் இத்தாலி குழுவின் சாகசநிகழ்வு

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இத்தாலி சாகசக் குழு ஒன்று கடந்த திங்கட் கிழமை மாலை சாகச நிகழ்ச்சிகளை முதியோர்களுக்காக நடாத்தியது.

இல்ல அத்தியட்சகர் தங்க வடிவேல் கிருபாகரனின் ஏற்பாட்டில் இந்த சாகச நிகழ்ச்சிகள் இலவசமாக இத்தாலியைச் சேர்ந்த சறாஸ் குழுவினரால் நடாத்தப்பட்டது.

இலங்கை வந்த இந்த இத்தாலிய குழுவினர் முதியோர்களை உள மகிழ்வுடன் வைத்திருக்க இந்த நிகழ்ச்சியை நடாத்தினார்கள்.

இத்தாலிய குழுவினரின் சாகச நிகழ்ச்சிகளை முதியோர்களும் இல்ல பணியாளர்களும் மிகுந்த உள உற்சாகத்துடன் கண்டு களித்ததைக் காண முடிந்தது.

முதியோர்களை இல்ல சுற்றாடலில் மகிழ்வாக வைத்திருக்கும் செயற்பாடுகளை தொடர்ச்சியாகவே தற்போதைய அத்தியட்சகர் கடைப்பிடித்து வருவதன் ஒன்றாகவே இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. (90)



வடமாகாண ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் யாழ். கல்வி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் துறைசார்ந்த உயர் அதிகாரிகள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

(படங்கள்: கே.நந்தகுமார்)

# ஆயுர்வேதம்

## காதில் விடும் மருந்து, எண்ணெய்கள்!



கண்களின் பாதுகாப்புக்காக இளநீர்க் குழம்பு, நயனாமிருதம் ஆகிய கண்களில் விடும் சொட்டு மருந்துகள் பற்றியும், மூக்கில் விடும் சொட்டு மருந்தாக அணு தைலம் பற்றியும் முன்பே விவரித்துள்ளோம். காதுகளில் அடைப்பு, ரஅல என்ற அழுக்கான கெட்டிபட்டுப் போன வஸ்து போன்ற பல உபாதைகளிலிருந்து நிவாரணம் பெற, காதினுள் விடும் ஆயுர்வேத மருந்துகள் [illegible]ற்றிப் பார்க்கலாம்.

"வசாலசுணாதி" என்ற பெயரில் ஓர் ஆயுர்வேத மூலிகைத் தைலம் காதுகளில் விட்டுக் கொள்வதற்கு மிகவும் நல்ல மருந்தாகும். காதின் நுட்பமான உணர்ச்சிமிக்க நரம்பு மண்டலம் அதிகச் சூட்டையும், அதிகக் குளிர்ச்சியையும் தாங்காது.

அதனால் இந்த மூலிகை எண்ணெய்யை இளஞ்சூடான நிலையில் பஞ்சில் எண்ணெய்யை நனைத்துச் சொட்டுச் சொட்டாகக் காதினுள் விட்டு, நிரம்பியதும் வேறு ஒரு வறண்ட பஞ்சினால் காதை அடைத்துவிட வேண்டும். சுமார் 8 - 10 நிமிடங்கள் தலையை அசைக்காமல் அப்படியேபடுத்திருந்து, செருகி வைத்துள்ள பஞ்சை எடுத்துவிட்டு, எண்ணெய்யை வடித்துவிட வேண்டும். திரும்பிப் படுத்து இது போலவே மற்ற காதினுள்ளும் விட்டுக் கொள்வது நலம்.

காதினுள் விடப்படும் எண்ணெய்யை நன்கு துடைத்து அகற்றாவிட்டால் வெளிப்புற அழுக்குகள் சேர்ந்துவிடும். மேலும் தலைக்குக் குளிக்கும்போது தண்ணீரின் துளிகள் காதினுள் எண்ணெய்ப் பிசுக்குடன் சேர்ந்து தங்கி வேக்காளத்தை ஏற்படுத்தும். அதனால் காதில் எண்ணெய் விட்டுக் கொள்ளும்போதெல்லாம், தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் குளித்தவுடன் பஞ்சு சுற்றிய குச்சியால் காதினுள் புண் ஏற்படாதவாறு மெதுவாக விட்டுத் துடைத்து விடுவது மிக மிக அவசியமாகும். காதில் ஏற்படும் வலி, அடைப்பு போன்றவை இதன் மூலம் விலகிவிடும்.

மழை மற்றும் பனி நாட்களில் சீதக் காற்று வாடை பட்டுச் சிலருக்கு காதினுள் சினப்புகள் கிளம்புவதும், காதிலும், சுற்றுப்புறத்து மண்டையிலும் கடும் வேதனையும் உண்டாகும். வாஸனைக் கோஷ்டம் என்றொரு மருந்துச் சரக்கு. அதன் மேலே ஒரு வெள்ளைத் துணியைச் சுற்றி நல்லெண்ணெய்யில் நனைத்துத் திரி போலாக்கி அதைக் கொளுத்தி எரியும் போது சொட்டுச்சொட்டாக அந்த ஜ்வாலையின் மேல் நல்லெண்ணெய்யை விட்டுக்கொண்டே வர, கீழ் சுடர் எண்ணெய் விழும்.

இந்தச் சுடர் தைலத்தை ஒரு கண்ணாடி போத்தலில் பத்திரப்படுத்தி, ஒரு பூண்டுப் பல்லை இந்தத் தைலத்தில் நனைத்து அனலில் வாட்டி இளஞ்சூடாக காதில் செருகிக் கொள்ள, மேற்குறிப்பிட்ட உபாதைகள் நீங்கிவிடும். இந்தச் சுடர் எண்ணெய்யை காதினுள் வெதுவெதுப்பாக நேரடியாகவும விட்டு வர, குளிரால் ஏற்படும் காதுவலி, மென்னி விறைப்பு, தோள்பட்டை வலி போன்றவை நீங்கி விடும்.

தேங்காய் எண்ணெய்யைச் சுட வைத்து அதில் கட்டிக் கற்பூரத்தைக் கரைத்து, சூடாகவே மென்னி, பிடரி, கழுத்து போன்ற பகுதிகளில் தடவிவிட்டு, கம்பளியை அனலில் காட்டி ஒத்தடம் கொடுப்பதும் நல்லதே. ஆனால் கரப்பான், காதினுள்ளே புண் உள்ளவர்கள் மருத்துவரின் அனுமதியின்றி எண்ணெய் விடுவது சரியல்ல.

பனிவாடை படாமல் குளிர்நாட்களில் கம்பளி போர்த்தி உறங்கிவிட்டு, காலையில் அறையைவிட்டு மிகவும் குளிர்ச்சியான வேறொரு அறை அல்லது வீட்டை விட்டு வெளியே வந்தால், சிலருக்குத் திடீரெனக் காது வலி ஏற்படும். உடனே சூடு பறக்க நெற்றி, காது, கை, கால்களைத் தேய்த்துவிடலாம். நெற்றிக்கு இடும் விபூதியில் சிறிதளவு கட்டிச் சூடத்தைக் கலந்து அதை நெற்றி முதலிய இடங்களில் தடவிக் கொள்ளலாம். முன் குறிப்பிட்ட சூடம் கரைத்த தேங்காய் எண்ணெய்யை வலி வரும் பகுதிகளில் தேய்த்துவிடுவது நல்லது.

எட்டி விதை கனமானது. 4-5 மணி நேரம் வேப்பெண்ணெய்யில் ஊற வைத்து ஒரு கூரான இரும்புக் குச்சியில் குத்திக் கொண்டு கொளுத்தி அதை ஊற வைக்க உபயோகித்த வேப்பெண்ணெய்யை எரியும் எட்டி விதையின் மேல் சொட்டு சொட்டாக விட, விதை எரிந்து கீழ் சுடர் தைலம் விழும். இதைக் காதில் விட வலி நிற்கும். வலியுடன் வரும் சீழும் நிற்கும்.







யாழ்.நூல் நிலைய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாணசபையின் அங்கத்தவர்களுக்கும் சிரேஷ்ட அதிகாரிகளுக்குமான செயலமர்வின் இரண்டாம் நாள் நிகழ்வின போது கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தைச் சேர்ந்த என்.செல்வக்குமரன், இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒஸ்ரின் பெர்ணாடோ ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் வடமாகாண முதலமைச்சர் உட்பட ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்-பா.பார்த்தீபன்)

# தபால் மூலம் வாக்களிப்போர் தகவல் பெற அழைக்கலாம் 1919

තොරතුරු කේන්ද්‍රය
அரசாங்க தகவல் நிலையம்
Government Information Centre
☎1919

தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்கள் தமது பதிவு தொடர்பிலான தகவல்களை, அரச தகவல் கேந்திர நிலையத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும், தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்ற அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொலிஸார மற்றும் பாதுகாப்பு பிரிவின் உறுப்பினர்கள் பதிவு தொடர்பான தகவல்களை, 1919 என்ற அரச தகவல் கேந்திர நிலையத்தின் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

நெருக்கடி நேரத்தில் இந்தத் தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொள்ள சிரமம் ஏற்படுவதால், பிற்பகல் 3 மணி முதல் 7 மணி வரையான காலப பகுதியில் தகவல்களை பெற்றுக கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குறுகிய காலத்தில் நாட்டின் அபிவிருத்தி; ஜனாதிபதி - உலகவங்கி தலைவர் சந்திப்பு

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்து, குறுகிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளில் முன்னேற்றம் உள்ள நிலையில், அவற்றை கவனத்திற் கொள்ளாது, நாட்டில் தேவையற்ற விதத்தில் பலர் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவருக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

நாட்டில் காணக்கூடிய அபிவிருத்தியின் முன்னேற்றத்தை வரவேற்பதாக உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் பிலிப் லே, ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படுகின்றமை மற்றும் அதன் தரத்தையும் பிலிப் லே, பாராட்டியதாக ஜனாதிபதி பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயற்பட உலக வங்கி தயார் என வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் உறுதி வழங்கியுள்ளார்.

# துவிச்சக்கர வண்டித் திருடன் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்தில் துவிச்சக்கரவண்டி திருட முற்பட்ட நபர் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து, யாழ். குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ். கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், நேற்று முன்தினம் காலை யாழ். பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்கிருந்த துவிச்சக்கரவண்டியின் பூட்டினை உடைத்து திருட முற்பட்டுள்ளார்.

இதனை அங்கிருந்து, அவதானித்த பொதுமக்கள், அவரை மடக்கிப் பிடித்து யாழ். குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாய் - 4 வயது மகன் பாசப் போராட்டம்

சிறைத்தண்டனை பெற்ற ஒரு பெண்ணின் நான்கு வயது ஆண்பிள்ளை தனது தாயை மீண்டும் சிறைக்கு கொண்டு செல்வதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் ஆயத்தமான போது கட்டுப்படுத்த முடியாதளவிற்கு உணர்ச்சிவசப்பட்டு கதறியழுது தாயை தழுவிக்கொள்ள முயன்ற சம்பவம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நான்கு வயது சிறுவனின பெற்றோர் இருவரும் ஆட் கடத்தல் வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்டு ஒன்பது வருட கடுழிய சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் மேன முறையீடு தொடர்பாக இப்பிள்ளையின் தாய் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் மீண்டும் சிறைக்கு கொண்டு செல்ல சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்பட்டபோது தானும் தாயுடன் போகப்போவதாக அந்தச் சிறுவன் கதறியழத் தொடங்கினான்.

அச்சிறுவனை சமாதானப்படுத்துவதற்கு உறவினர்கள் முயன்ற போதிலும் அவனது அழுகை அதிகரித்ததோடு தாயிடம் ஓடிப்போகவும் முயன்றான். இது துன்பியல் நாடகத்தின் காட்சியொன்றுபோல இருந்தது. அவனது அழுகையும் தாயின் பாசத்திற்கான ஏக்கமும் நீதிமன்ற வளாகத்திலிருந்த சிறை அதிகாரிகள் உட்பட அங்கிருந்த சகலரது இதயத்தையும் தொட்டது.

இந்தப் பிரச்சினையின் மனிதாபிமான பக்கத்தை கருத்தில் கொண்ட சிறையதிகாரிகள் அந்தப் பிள்ளையை தாய் தூக்கி அரவணைத்து ஆறுதல் கூறுவதற்கு அனுமதித்தனர். பின்னர் ஒருவாறு தாய் மகனை பிரித்து கைதியான தாயை சிறைச்சாலை வாகனத்தில் அதிகாரிகள் ஏற்றிச்சென்றனர்.

# ஜெனிவா செல்லும் ஐ.தே.க. அங்கத்தவர்கள்

(கொழும்பு)



எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் இருவர் பங்கேற்கவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் தலதா அத்துகோரளை ஆகியோரே ஜெனிவா செல்லவுள்ளனர்

கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

# யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டங்களில் 5 இலட்சத்து 16ஆயிரத்து 974 வாக்காளர்கள்

கொழும்பு)

யாழ். மற்றும், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்தாண்டில் மட்டும் 5 இலட்சத்து 16 ஆயிரத்து 974 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி. குகநாதன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவு யூன் மாதம் மேற்கொள்ளப்பட்டு இம்மாதம் 20ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

அதனடிப்படையில், யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 508 வாக்காளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 75 ஆயிரத்து 466 பேரும் பதிவு செய்துள்ளனர்.

2009ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரை குறித்த மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வசிக்கும் வாக்காளர்களின் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு, அதில் கணிசமானோர் வாககாளர்களாக பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பதிவு செய்தோரின் புள்ளிவிபரங்கள் தேர்தல் காலங்களில் வெளியிடப்படும் 2014ஆம் ஆண்டிற்கான வாககாளர் பதிவுகள் எதிர்வரும் யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதானவர் சான்றுகள் நிருபிக்கப்படாததால் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்ட வேலணை சரவணை மேற்கினைச் சேர்ந்த மகாலிங்கம் ஜனகன் என்பவர், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

1999ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.

தொடர்ந்து இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா முகாமில் வைத்து, அங்கிருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஜனகனால் அளிக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த நபருக்கு எதிரான வேறு சான்றுகள் உள்ளனவா என பரிசீலனை செய்து பார்ப்பதற்காக நேற்று முன்தினம் மேற்படி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த நபருக்கு எதிராக வேறு சான்றுகள் நிரூபிக்கப்படாத காரணத்தினால், அவரை விடு தலை செய்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். குறித்த நபர் சார்பாக சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் மன்றில் ஆஜராகியிருந்தார்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

## பகுதி I

01) 8 பேனைகளின் விலை ரூ. 100 எனின், ஒரு பேனையின் விலையைக் காண்க.

02) கீழுள்ள எண் பரம்பலின் வீச்சைக் காண்க.
6, 9, 10, 11, 17

03) 2x = 14 எனின், x இன் பெறுமானம் காண்க.

04) 24 x 15 = 360 எனின், 0.24 x 15 இன் பெறுமானத்தைக் காண்க.

05) இடைவெளிக்குப் பொருத்தமான உறுப்பை எழுதுக.
$a^2 + 2ab = a$ (.......... + 2b)

06) (+6) x (-3) பெறுமானம் காண்க.

07) இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
7, 11, ..........., 19, 23

08) a x b x a சுட்டி வடிவில் எழுதுக.

09) 1 மீற்றர் கனத்தில் எத்தனை லீற்றர் உண்டு?

10) $x^0$, $62^0$ என்பன மிகை நிரப்பு கோணங்களாகும். $x^0$ இன் பெறுமானம் காண்க.

11) எண் பரம்பலில் முதலாம் காலணை 5 உம் காலணை, இடை வீச்சு 15 உம் ஆகும். மூன்றாம் காலணையைக் காண்க.

12) தசமத்தில் தருக $\frac{2}{15}$

13) மோட்டார் வாகனம் 5 மணித்தியாலயத்தில் 200 km தூரம் செல்கிறது. மோட்டார் வாகனத்தின் வேகத்தினைக் காண்க.

14) பெறுமானம் காண்க. $\log_4 64$

15) பெட்டியொன்றை ரூ. 900 விற்பனை செய்வதன் மூலம் 10% நட்டம் ஏற்பட்டது. அப்பெட்டியின் கொள்விலையைக் காண்க.

16) பெறுமானம் காண்க. $\sqrt{12}$ x $\sqrt{3}$

17) தரப்பட்டுள்ள செவ்வகம் ABCD இன் பரப்பளவிற்கான இருபடி சமன்பாட்டினை எழுதுக.




18) xy = 54 உம் x : y = 3 : 2 ஆகும். x, y இற்குப் பொருத்தமான இரு முழு எண்களும் எவை?

19) பொதுமடங்கில் சிறியதைக் காண்க. 12, 20, 30

20) உருவின்படி A இலிருந்து B இன் திசைகோள் யாது?




21) 3y - 2x = 4 இனால் கரட்டப்படும் ஏகபரிமான சமன்பாட்டின் படித்திறனைக் காண்க.

22) உருவில் $B\hat{A}C = 40$, CA//DE ஆகும். $E\hat{D}C$ இன் பெறுமானம் காண்க.




23) நாணயமொன்றை இரு முறைகள் மேலே எறியும்போது கிடைக்கும் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் காட்டுக.

24) காரணிப்படுத்துக. a (x-2) + b (2-x)

25) A = {a, b, c}, B = {a, c} ஆகும். கீழுள்ளவற்றில் உண்மை கூற்றை தெரிக.
i) n (A) = 5 ii) A⊂B
iii) A∩B = {a, c} iv) A∪B = {a, b, c}

26) உருவில் தரப்பட்டுள்ளது அரைவட்ட தகடாகும். அதன் ஆரை r ஆகும். தகட்டின் சுற்றளவிற்கான கோவையை π, r இல் தருக.




27) கூட்டுக. $101_{இரண்டு} + 1011_{இரண்டு}$

28) $1936 = 2^4 \times 11^2$ ஆகும். $\sqrt{1936}$ காண்க.

29) தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் O ஆகும். BAC = a, COD = b ஆகும். a, b இடையிலான தொடர்பை எழுதுக.




30) $K = \frac{a}{b}$ எனின், $\frac{K}{K-1}$ சூத்திரத்தினை a,b இல் எழுதுக.

## பகுதி B

01) a) வருடத்திற்கு 8% கூட்டுவதற்கு நிமல் ரூ. 50, 000 ஐ கடனாகப் பெறுகிறார். 6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செலுத்த வேண்டும்.
i) முதல் 6 மாதங்களுக்குரிய வட்டியைக் காண்க.
ii) 1 1/2 வருடங்களுக்குப் பின் கடனிலிருந்து மீளுவதற்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகை எவ்வளவு?

b) காணி ஒன்றை A,B இற்கிடையில் 2:3 விகிதத்திலும் B, C இற்கிடையில் 2:3 விகிதத்திலும் பகிரப்படுகிறது. முழுக்காணியில் சரிபாதி C இற்கு கிடைக்காதென சுமனபால கூறுகிறான். நீங்கள் சுமனபாலவின் கருத்துடன் உடன்படுகின்றீர்களா? காரணம் தருக.

02) p, q, 11, r, 19 என்பது கூட்டல் விருத்தியொன்றின் முதல் 5 உறுப்புகளாகும்.
a) r இன் பெறுமானத்தினைக் காண்க.
b) p, q இன் பெறுமானத்தினைக் காண்க.
c) 99 எத்தனையாம் உறுப்பாகும்.
d) இவ்விருத்தியின் முதல் 25 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

03) a) கனவுரு வடிவ உலோக குற்றியின் நீளம் 1 m உம் அகலம் 75 cm உம் 60 cm உயரமும் ஆகும். அக்குற்றியின்
i) மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.
ii) கனவளவைக் காண்க.

b) மேற்படி உலோக குற்றியை உருக்கி சிறிதளவேனும் வீணாகதவாறு உருவில் காட்டியபடி அரியங்கள் செய்யப்படுகின்றன.
i) செய்யப்பட்ட அரியமொன்றின் கனவளவைக் காண்க.
ii) செய்யப்பட்ட அரியங்களின் எண்ணிக்கை யாது?




04) a) ℰ = {a,b,c,d,e,f,g,h}
P = {a,d,f}
Q = {b,d,f,h ஆகும்.
மேற்படி தொடைகளை பாவித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
a) P ∩ Q எழுதுக.
ii) P ∪ Q எழுதுக.
iii) $(P \cap Q)^1 = P^1 \; Q^1$ எனக் காட்டுக.

b) $P(A \cap B) = \frac{5}{6}$, $P(A) = \frac{2}{3}$, $P(B) = \frac{1}{6}$ ஆகும்.

i) $P(A \cap B)$ காண்க

ii) " A, B நிகழ்வுகள் தம்முள் புற நீக்கும்" இக்கருத்துடன் உடன்படுகிறீர்களா? விளக்குக.

05)




சதுர வடிவ பீங்கான் ஓடுகள் இரண்டு உருவில் காட்டப்பட்டுள்ளது.

a) i) பீங்கான் ஓட்டின் பரப்பளவினைக் காண்க.

ii) பீங்கான் ஓடுகள் இரண்டினதும் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதத்தினைக் காண்க.

b) நீளம் 4.2 m உம் அகலம் 1.8 m உம் உடைய செவ்வக வடிவ நிலத்திற்கு பீங்கான் ஓடுகள் பதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் இந்நிலத்திற்கு பதிக்க நீர் உத்தேசிக்கும் ஓடு எவ்வகை யானது? விடையை தெளிவுபடுத்துக.

## பகுதி II

### பகுதி A

01) i) ஆண்டுப் பெறுமானம் ரூ. 60, 000 உடைய வீட்டிற்கு மாநகர சபை 18% ஐ ஆண்டு வரியாக அறவிடுகின்றது. இவ்வீடு ரூ. 4000 மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஆண்டுப் பெறுமதியின் 42.5% வருடாந்தம் வீட்டைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக செலவிடப்படு கின்றது. வரி, புனர்நிர்மாணம் என்பன கிடைக்கும் வாடகைப் பணத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

a) காலாண்டு வரியைக் கணிக்க.
b) புனர்நிர்மாணத்திற்காக வருடத்திற்குச் செலவாகும் பணத்தைக் காணக.
c) அவ்வீட்டினால் வருடத்திற்கு கிடைக்கும் தூய இலாபம் எவ்வளவு?

02)
i) $y = x^2 - 4x + 2$ சார்பின் வரைபை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | |
| y | 7 | 2 | -1 | -2 | | 2 | 7 |

a)
i) x = 3 ஆக இருக்கும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii) பொருத்தமான அளவிடையைக் கொண்டு சார்பின் வரைபை வரைக.
b) சார்பு மறையாகும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

c)
i) $x^2 - 4x + 2 + (x+a)^2 + b$ என எழுத முடியும் எனக் காட்டுக. (இங்கு a, b இன் பெறுமானங்கள் குறிப்பிடப்பட வேண்டும்)

ii) நீர் வரைந்த வரைபு y அச்சு வழியே 3 அலகுகள் கீழ்நோக்கி நகர்த்தப்படுகிறது. புதிய அமைவின் உச்சிப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

03) a) $A = \begin{pmatrix} 0 & 1 & 3 \\ 6 & 4 & 2 \end{pmatrix}$ $B = \begin{pmatrix} 1 & 2 & 4 \\ 5 & 3 & 1 \end{pmatrix}$ ஆகும். கீழுள்ள

1) A+B ii) A-B iii) 2A+3B தாயங்களைக் காண்க.

b) தீர்க்க $\frac{1}{x+2} + \frac{2}{x^2+4}$

04) a) கப்பல் ஒன்று O எனும் துறைமுகத்திலிருந்து 035° திசைகோளில் 150 km தூரம் பயணம் செய்து B எனும் துறைமுகத்தை அடைந்தது. அதிலிருந்து 120° திசைகோளில் 100km பயணம் செய்து C துறை முகத்தை அடைந்தது.

i) 1 cm இனால் 25 km எனும் அளவிடைக்கு மேற்படி தரவுகளை அளவிடை படத்தில் குறிக்க.
ii) துறைமுகம் O விலிருந்து துறைமுகம் C இற்கு உள்ள உண்மைத் தூரத்தைக் காண்க.
iii) O இலிருந்து C இன் திசைகோள் யாது?

b) முக்கோணி ABC இல் $\underline{h}$ AB DC ஆகும்.
AC = 20 cm, BD = 10 cm ξ
$A\hat{C}B = 35^0$ உம் ஆகும்.

i) AB இன் நீளத்தைக் காண்க.
ii) ADB இன் நீளத்தைக் காண்க.




05) தேயிலை கொழுந்து சேகரிக்கும் ஒருவர் தொழிற்சாலைக்கு குறிப்பிட்ட கால எல்லையினுள் வழங்கிய கொழுந்துகளின் அளவு தரப்பட்டுள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நா.ஒ.வ.கொ (kg) | 50-54 | | | 65-69 | 70-74 | 75-79 | 80-84 | 85-89 |
| நா.எ.கை (மீடிறன்) | 8 | 19 | 30 | 33 | 13 | 11 | 9 | 2 |

a) அட்டவணையிலுள்ள தரவுகளின் இடைய வகுப்பைக் காண்க.

b) நாளொன்றிற்கு வழங்கிய தேயிலைக் கொழுந்துகளின் இடையைக் கணிக்க.

c) அக்கால எல்லையினுள் அவர் வழங்கிய தேயிலைக் கொழுந்து களின் மொத்த நிறை எவ்வளவு?
d) எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நாளொன்றில் வழங்கிய தேயிலைக் கொழுந்துகளின் நிறை 65 Kg இலும் அதிகமாயிருப்பதன் நிகழ் தகவினைக் காண்க.

06) a) முக்கோணி ABC இல் A உச்சியிலிருந்து பக்கம் BC இற்கு வரையப்படும் செங்குத்தின் அடி D ஆகும். AD = (x+1) cm, BC = (2x) cm முக்கோணி ABC இன் பரப்பளவு 12 $cm^2$ ஆகும்.

i) மேற்படி தரவுகளினூடாக இருபடிச் சமன்பாடு ஒன்றை உருவாக்குக.
ii) x இன் பெறுமானம் காண்க.

b) $3x - 2 \geq 5x - 6$ சமனிலியைத் தீர்க்க, தீர்வை எண் கோட்டின் மீது குறிக்க.

### பகுதி B

07) a) இரண்டாம் உறுப்பு 7 உம் எட்டாம் உறுப்பு 19 உம் உடைய கூட்டல் விருத்தி ஒன்றில்,
i) முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் காண்க.

ii) முதல் எத்தனை உறுப்புகளின் கூட்டுத்தொகை 480 ஆகும்.

b) 2 இற்கும் 18 இற்குமிடையில் பெருக்கலிடையைக் காண்க.

08) cm /mm அளவிடையையும் கவராயமும் மட்டும் பயன்படுத்தி,

a) AB = 6 cm, BC = 8 cm, $A\hat{B}C = 90^0$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்க

b)
i) AC இன் நீளத்தினை அளந்து எழுதுக.
ii) AC இன் நீளத்தைக் காண்பதால் உமது விடையை உறுதிப்படுத்துக.

c) முக்கோணி ABC இன் சுற்று வட்டத்தினை அமைக்க. சுற்று வட்டத்தில் விட்டம் உண்டா? அதனைப் பெயரிடுக.

09) a) நடுப்புள்ளி தேற்றத்தை சொற்களில் விபரிக்குக.

b) முக்கோணி KLM இன் பக்கங்களின் நடுப்புள்ளிகள் X, Y, Z ஆகும். முக்கோணி KLM இன் சுற்றளவு முக்கோணி XYZ இன் சுற்றளவின் இரு மடங்கு எனக் காட்டுக.

c) உருவில் பக்கங்கள் PR, AC என்பவற்றின் நடுப்புள்ளி K உம், பக்கங்கள் PQ, AB என்பனவற்றின் நடுப்புள்ளி H உம் ஆகும்.

i) BC = QR எனவும்,

ii) BCRQ ஒரு இணைகரமாகும் எனக் காட்டுக.



# வேலணை பிரதேச வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

(வேலணை)

வேலணை பிரதேச வைத்தியசாலையில் சுகாதார அமைச்சினால் அமைக்கப்படவிருக்கும் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ தேவானந்தாவிடம் வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவ்ராசாவினூடாக ( போல் ) மக்கள் விடுத்த கோரிக்கைக் கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வேலணை பிரதேச வைத்திய சாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு சுகாதார அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டு ஒப்பந்தகாரரிடம் வேலைத்தளம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் இக்கட்டடத்திற்கான அடிக்கல் கடந்தவாரம் நாட்டிவைக்கப்பட்டது.

வேலணை பிரதேச வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தவிசாளரும் ஈ.பி.டி.பி வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்), பிரதேச வைத்தியசாலை வைத்திய கலாநிதி காந்தரூபன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் தவபாலன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் செந்தில்குமார், வைத்தியசாலை நலன்புரிச் சங்க உறுப்பினர் சிவநாதன் ஆகியோர் கட்டடத்திற்கான அடிக்கலலை நாட்டிவைத்தார்கள்.

இந்நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பணியாளர்கள் ஊழியர்கள், சுகாதாரசேவைகள் பணிமனை உததியோகத்தர்கள், வேலணை பிரதேச வைத்தியசாலை நலன் புரிச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், ஒப்பந்தகாரர் இதில் கலந்துகொண்டனர்.

# வர்த்தக சம்மேளன விழா



அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனம் தனது இருபது வருட பூர்த்தி விழா நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

அம்பாந்தோட்டை சிரிபோபுர சிங்கப்பூர் நட்புறவு மண்டபத்தில் இந்த வர்த்தக சம்மேளன விழாவின் போது வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சுசந்த அக்மீமன ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.

அவ்வாறே வர்த்தகத் துறையில் சிறந்து விளங்கும் வர்த்தக பெருந்தகைகள் மூவருக்கு ஜனாதிபதியின் கரங்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அமைச்சர் மகிந்த அமரவீர தென் மாகாண சபை ஆளுநர் குமாரி பாலசூரிய அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனம் ஆரம்ப கால தலைவர் அஸ்லி காஸீம் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தேசியக்கொடி தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கம்

இலங்கையின் 66 ஆவது சுதந் திரத்தினத்தை முன்னிட்டு தேசியக்கொடி தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் கல்விக் கருத்தரங்கொன்று நேற்றுக் காலை கேகாலை நகரசபை மண்டபததில் நடைபெற்றது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில், தொலைதொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மேலும் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி. அபேகோன் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார். அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஹில்மி மொஹமட் உட்பட கேகாலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச உயரதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் தீப்தி பெர்னாண்டோ மற்றும் கல ரா அபிவிருத்தி அதிகாரி சிசிர குமார மஹகம ஆகியோர் தேசிய கொடியின் முக்கியத் ம் குறித்து விரிவுரைகளை ந ழ்த்தினர்.

கேகாலை மாவட்டத்தில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் பாடசாலை மாணவ, மாணவிகள் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

# பரமர் சங்கமம்



“ஊசிப்பட்டாசே வேழக்கையாலே தீவைத தாலே வெடி யார்... யார்” பழைய சினிமாப் பாடலொன்று ஞாபகத்துக்கு வந்து போகிறது

எல்லாம் அடுத்தடுத்து வந்த நத்தார் புது வருடம் தைப் பொங்கல் திருநாட்களால்தான்

ஐமபது அறுபது எழுபதுகளில் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னாதாகவே ஆரம்பிக்கும் வெடி ஓசைகள் புதுவருடம் அடுத் தாற்போல தைப்பொங்கல் பண்டிகை முடிந்து சில தினங்கள் கழியத்தான் ஓயும்.

இப்பெல்லாம் அப்புடியா அந்தந்த திருநாளில் மட்டும் வெடி ஓசைகள் அதிர்வதோடை சரி. ஆனால் புதிய வழக்கமொண்டு தொற்றிக்கொண்டு விட்டது அதாவது பிறந்த நாள், கல்யாண வீடு, செத்த வீடு, சாமத்திய வீடு, பணச் சடங்கு இப்படிப் புதுக்கலா சாரம் வந்து அதுகளிலும் வெடிகள் அதிர்கின்றன.

எண்பத்து மூன்று யூலை மாதத்திற்கு பிற்பாடு குடாநாட்டில் இரண்டாயிரமாம் ஆண்டு வரை விதம் விதமான வெடி ஓசைகள் தினந்தோறும் அதிரவைத்ததையும் மறக்கவா முடியும்? இந்த வெடிகள் ஆரம்பத்தில் சீனாவில் இருந்து தருவிக்கப்பட்டதால் சீன வெடி என்றே சொல்லப்பட்டது

அதற்குப் பின்பாகவே தமிழ் நாடு இலங்கையில் வெடிகள் உற்பத்தி செய்திருக்க வேண்டும் சீனாவில் இருந்து தருவிக்கப்பட்ட உருவில் மிகச்சிறிய வெடிகளும் அடங்கும் அதனை நாங்கள் மணிப்பட்டாஸ் என்போம். அதுவே தமிழ் நாட்டில் ஊசிப் பட்டாசென அழைக்கப்பட்டது அதை வைச்சே சினிமாப்பாடல் எழுதப்பட்டதாக இருக்கலாம்

பரமர் சிறு பிள்ளையாக இருக்கும் காலத்தில் ஊருக்குள் கொடுக்கு கட்டி என்ற பட்டப்பெயரைக் கொண்டவர் கடை வைச்சிருந தார் அவர் நட்டாமுட்டிக் காறராகவும் திகழ்ந்தார். அவரிடம் நான் கேக்கும் வெடிகளைக் கொடுத்து கணக்கெழுதி வாங்கும் படி தகப்பனார் கூறிவிட்டார் பிறகென்னைக் கேட்கவா வேண்டும்?

ஒவ்வொரு தடவையும் பத்துப் பதினைந்து வெடிக்கோர்வை அடங்கிய கட்டில் வாங்கிச்சென்று சகோதரர்களுக்கு ஒண்டை ரெண்டை குடுத்துப் போட்டுக்கொழுத்தித் தள்ளினான் வெடிக்காமல் கிடக்கும் பட்டாசுகளை எடுத்து அதனுள் இருக்கும் வெடி மருந்துகளை குவித்து நெருப்பு வைத்து மகிழ்வோம்

ஒரு முறை என்ரை கைகளிலும் வெடி மருந்து ஒட்டிக் கொண்டிருந்து தீ வைக்கையில் என்னுடைய கைகளும் எரிந்தது இண்டைக்கும் ஞாபகமா இருக்கு வெடி மருந்தைக் கண்டறிந்த நோபல் அதனால் ஏற்படக்கூடிய அழிவுகளை அறிந்து அதனால் சம்பாதித்த பணத்தில் நோபல் பரிசுத் திட்டத்தை உருவாக்கி னதை அறிவியள்.

ஊசிப்பட்டாசில் இருந்து உலகை யே அழிக்கக் கூடிய அணு குணடுகளை இப்போதைய நாகரிக உலகம் உற்பத்தி செய்யு தெண்டால் பாருங் கோவன் என்ன நான் சொல்லுறே...

# ஆன்மீக பேருரை

(முழங்காவில்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கும் சின்மய மிஷனைச் சேர்ந்த கிருஸ்ணாஸ் மானந்தா சுவாமிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு தருமபுரம் இந்து அ.த.க.பாடசாலையில் ஆன்மீக பேருரை ஆற்றவுள்ளார்.

அன்பின் ஆற்றல் என்னும பொருள்பற்றி அருளுரை ஆற்றவுள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு உழவனூர் சின்மயமிஷன் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். (112)

# மின் விநியோகம்

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு கிராம அலுவலர் க.கணேசதாஸின் கோரிக்கைக்கு இணங்க அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் கேதீஸ்வரன் அளவெட்டி அறிவொளி சனசமூக நிலையத்திற்கு தனது செலவில் மின்சார இணைப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அறிவொளி சனசமூக நிலையத்திற்கான காணியும் முன்பு இதே கிராம அலுவலர் க.கணேசதாஸினால் இலவசமாகப் பெற்றுக்கொடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது' (63)

# முரசின் இன்றைய பலன்



(29.01.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 16 ஆம் திகதி.
திரியோதசி / அமிர்தம்.
பூராட நட்சத்திரம் மா. 6.25 வரை. பின் உத்தராடம்.
இராகு காலம் 12.36 - 02.06 வரை. சுபநேரம் 05.06 - 06.36 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் வஞ்சத்தை வைத்துக்கொண்டு மரியாதையாக பேசுதல். வெளியூர் பயணம் நன்மையடைதல். |
| ரிஷபம் | காலாவதியான பொருட்களால் வியாபாரத்தில் நஷ்டம், தவறை எண்ணி மனம் வருந்துதல். |
| மிதுனம் | உடல்நலக் குறைவினால் பணிகள் ஸ்தம்பிதமடைதல், ஒப்பந்த செயலால் முக்கிய பணி கைவிடப்படல். |
| கடகம் | நிலுவைப்பணம் கிடைத்ததால் மகிழ்ச்சி, திருமண பேச்சு நன்மையில் முடிவடைதல். |
| சிம்மம் | சிறப்பான செயலால் பாராட்டுப் பெறல், வெளியூர் பயணத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கன்னி | இடமாற்ற விடயம் சுமூகமாகத் தீரும், ஊழியர்களுடன் முரண்பட்டதால் மனச்சோர்வு. |
| துலாம் | சந்தேக குணத்தால் குடும்பத்தில் கலவரம், உடல் நலக் குறைவால் அலைச்சல். |
| விருச்சிகம் | குருவின் கெடுதிப் பலனால் தொழிலை கைவிடல், ஒப்பந்த வேலை துரிதமாக முடிவடையும். |
| தனுசு | வியாபாரம் நஷ்டமடையும். மகிழ்ச்சியான செய்தியால் குடும்பத்தில் குதூகலம். |
| மகரம் | வங்கியில் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத அவலநிலை, உடல் நலக்குறைவால் நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாத நிலை. |
| கும்பம் | இழுபட்ட காரியம் வெற்றியில் முடிதல், காப்புறுதி பணம் கிடைத்தல். |
| மீனம் | திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாக காணப்படும். இழுபட்ட காரியம் சுலபமாக வெற்றிகிட்டும். |

## நெடுந்தீவு பிரதேச சபையின் வெற்றிடங்களை நிரப்புதல்-2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் நெடுந்தீவு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி பதவியணிகளில் உள்ள வெற்றிடங்களின் விபரங்களிற்கமைய, கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ ஆம் இலக்க கடிதத்திற்கு அமைவாகவும் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | பதவி இலக்கம் |
|---|---|
| சுகாதாரத் தொழிலாளி வகுப்பு III | 01 |
| வேலைத் தொழிலாளி வகுப்பு III | 02 |
| நூலகப் பரிசாரகர் வகுப்பு III | 03 |
| மின்சாரத் தொழிலாளி வகுப்பு III | 04 |
| சாரதி வகுப்பு III | 05 |

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் நெடுந்தீவு பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 18.02.2014 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தொழில்நுட்பம் சார் சேவைகளிற்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும், மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை.**

சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சைக்கு ஒழுங்கு விதிகளிற்கமைய ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை.**

1. நெடுந்தீவு பிரதேசசபையில் ரூபா 250.00 செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, நெடுந்தீவு. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படவேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென தெரியவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தி வைக்கப்படும்.
6. விண்ணப்பங்கள்யாவும் விண்ணப்ப முடிவுத்திகதி 18.02.2014 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**பதவி இலக்கம். 01, 02, 03,**

**கல்வித்தகைமை:-** கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எனினும் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** 01.01.2013ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 11730 – 18x120 – 13890 (PL-1-2006A) ஆகும்.

**பதவி இலக்கம். 04,**

**கல்வித்தகைமை:-** கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எனினும் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்தில் ஆறு மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்டதுறை ரீதியான தொழில்சார் கற்கைநெறி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** 01.01.2013ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 12210 – 18x130 – 14550 (PL-2-2006A) ஆகும்.

**பதவி இலக்கம். 05,**

**கல்வித்தகைமை:-**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எனினும் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2.5அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
6. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** 01.01.2013ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 12470 – 18x130 – 14810 (PL-3-2006A) ஆகும்.

நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகம்,
நெடுந்தீவு பிரதேசசபை

செயலாளர்,
நெடுந்தீவு.

(C/3335)

# நாட்டுக்காக மரணித்தவர்களுக்கு காங்கிரஸ் ஒரு நினைவுச் சின்னம் கூட நிறுவிபதில்லை

## நரேந்திரமோடி ஆதங்கம்



(புதுடில்லி)

நாட்டிற்காக உயிர் நீத்த வீரர்களுக்காக காங்கிரஸ் அரசு, ஒரு போர் நினைவுச் சின்னத்தையும் இதுவரை ஏற்படுத்தவில்லை. அந்த நல்ல பணியை எனக்காக அவர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள் போர் நினைவுச் சின்னம் இல்லாத ஒரே நாடு இந்தியர் என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் 1961இல் நடைபெற்ற போரில் உயிர் நீத்த வீரர்கள் நினைவாக. லதா மங்கேஷகர் பாடிய பாடலின் 51ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரில் உயிர் நீத்த வீரர்களின் தியாகத்தை கௌரவிப்பதற்காக அமைக்கப்படும் நினைவுச் சின்னம் இல்லாத ஒரே நாடு இந்தியாதான் என்பது வேதனையான விசயம். தற்போதைய நிலையில், அடுத்து வரும் பொதுத் தேர்தலில், பாரதிய ஜனதாவுக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது.

ஒரு இராணுவ சக்தியாக விளங்கும் தகுதி இந்தியாவுக்கு இருக்கிறது. இந்தியா முடிவு செய்தால், சரியான தலைமையும், கொள்கைகளும் இருந்தால், 10 ஆண்டுகளில் இந்தியா இதர நாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும்.

போர் வீரர்களையும் தியாகிகளின் குடும்பத்தினரையும் கௌரவிப்பதென்பது, நாட்டிற்காக சுயநலம் இல்லாமல் தியாகம் செய்த அனைவரையும் கௌரவிப்பதாகும்..

# பெரு-சிலி கடல் எல்லைகள் ஐ.நா. உயர்நீதிமன்றம் நிர்ணயம்



பெரு.சிலி நாடுகளுக்கிடையே கடல் எல்லை குறித்து ஐ.நா.உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தென் அமெரிக்காவின் பெரு, சிலி, பொலிவியா நாடு களுக்கிடையே 1879-83ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பசுபிக் போரில் பெருவையும், பொலிவியாவையும் தோற்கடித்த சிலி அந்நாடுகளின் மூன்று வடக்கு மாகாணங்களை வென்றது. இந்தப் போரில் தோற்ற பொலிவியா, சிலியிடம் தனது கடற்கரைப் பகுதியை இழக்க நேரிட்டது.

ஐ.நா.வின் உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் வெளியிட்ட தனது தீர்ப்பில் பெரு மற்றும் சிலி நாடுகளுக்கிடையேயான கடல் எல்லைக் கோட்டை நிர்ணயம் செய்துள்ளது. இந்தத் தீர்ப்பின் படி பசுபிக் கடலின் பெரிய பகுதி பெரு நாட்டு எல்லைக்குள் அமைய மீன்பிடி வளங்கள் அமைந்த கடற்கரைப் பகுதிகள் சிலி நாட்டைச் சேருகின்றன. இந்தத் தீர்ப்பினைக் குறித்த உணர்வுகள் பெரு நாட்டு மக்களிடையே அதிகமாகக் காணப்பட்டபோதிலும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ந்துள்ள இரு நாடுகளின் பொருளாதார வர்த்தக வளர்ச்சியில் இந்த அறிவிப்பு சிறிதளவானதாக்கத்தையே ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகின்றது.

பெரு நாட்டின் அதிபர் ஒல் லன்ட்டா ஷிமாலா இந்தத் தீர்ப்பு குறித்த தனது திருப்தியை வெளியிட்டுள்ளார்.

தென் அமெரிக்க நாடுகளுக்கிடையே இதற்கு முன்னால் கடல் எல்லைக்கோடு குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை என்ற தங்களின் வாதம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் கருத்து தெரிவித்தார்.

தன்னுடைய பதவிக்காலம் முடிந்து வெளியேறவுள்ள சிலியின் செபாஸ்டியன் பினேரா இது ஒரு வருந்தத்தக்க இழப்பு என்று கூறியுள்ளார். ஆனால் அடுத்து பதவி ஏற்கவுள்ள மிசேல் பச்சலேட்டோ மீன்பிடி வளங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருப்பது குறித்து திருப்தியான ஒப்புதலை அளித்துள்ளார்.

# ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்



பாகிஸ்தானைச் சேர்ந்த தாய் ஒருவர் ஒரே பிரசவத்தில் ஆறு சிசுக்களை ஈன்றெடுத்துள்ளார்.

வழமையான பரிசோதனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை தனியார் மருத்துவமனை ஒன்றிற்குச் சென்ற சந்தர்ப்பத்தில் அவர இந்த 6 சிசுக்களையும் பிரசவித்துள்ளார். இவர்களில் 4 பெண் சிசுக்களும் 2 ஆண் சிசுக்களும் அடங்குகின்றன.

குறித்த தாயும் 6 சிசுக்களும் ஆரோக்கியமாக இருந்த போதிலும் 2 பெண் சிசுக்கள் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி பாகிஸதான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வடக்கு கடல்வளத்தை இந்தியர்களுடன் பகிர்ந்துகொள்ள இடமளிக்க முடியாது

## ஹெலஉறுமய சீற்றம்

நாட்டின் கடல் எல்லையை இந்திய மீனவர்கள் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ள ஜாதிக ஹெல உறுமய, தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையை மீறுவதனை தடுப்பதற்காக அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகச் செயலாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்கவினால் நேற்றுஅறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையை ஆக்கிரமித்து, வட கடலில் காணப்படும் மீன் வளத்தை சூறையாடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இலங்கை மீனவர்கள் இந்தியக்கடல் எல்லையை மீறும் சம்பவங்களுடன் ஒப்பிடுகையில், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையை மீறும் சம்பவங்கள் பல மடங்கு அதிகமாகும். இவ்வாறாக, தமிழ் நாட்டு மீனவர்கள் வடக்குக் கடலில் உள்ள மீன் வளத்தை பல தசாப்தங்களாக சூறையாடி வருகின்ற போதும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உயிர் கொடுப்பதாக கதைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக ஊமையாகவுள்ளது. இவ்வாறு தமிழ் நாட்டு மீனவர்கள் தொடர்பாக அமைதியாக இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை வேடத்தையே காட்டுகின்றது.

இந்நிலையில், தெற்கு மீனவர்கள் வட கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வேளையில், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்ததை எம்மால் மறக்க முடியாது. இதேபோன்று புலிகள் தெற்கு மீனவர்களுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால், தமிழ் நாட்டு மீனவர்கள் வட கடலுக்குள் மீன் பிடிக்கும் போது, புலிகள் எவ்வாறு அமைதியாக இருந்தனரோ அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அமைதியை கடைப்பிடிக்கின்றது. இதேவேளை, இரு நாட்டு மீனவர்களும் கடல் எல்லைகளை மீறுவதனைத் தவிர்க்கும் வகையில் இரு நாடுகளும் நடவடிக்கையெடுக்க வேண்டும் ஆனால், இலங்கை கடல் எல்லையை இரு நாட்டு மீனவர்களும் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையை அத்துமீறுவது இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாகும். இந்நிலையில், இரு நாட்டு மீனவர்களும் கடல் எல்லையை மீறுவதனை இரு தரப்பு பேச்சுவார்த்தையூடாக தீர்க்கக் கூடியதாகவிருந்தது. ஆனால், தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெய. லலிதா அதனை சீர்குலைக்க முயற்சித்துள்ளார். இதனை நாம் கண்டிக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்து கடற்பரப்பில் இலங்கை படகு ஆபத்தில்

நியுசிலாந்து - நோ.'.புலொக் தீவுக்கு அருகில் அசாதாரண கால நிலை காரணமாக மீனவப் படகொன்று சிக்கியுள்ளதாக அவுஸ்ரேலிய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. நியுசிலாந்திலிருந்து குயின்ஸ்லாண்டின் கிலேட்ஸ்டோன் பகுதிக்கு குறித்த படகு பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த படகில் இலங்கையைச் சேர்ந்த பல பணியாளர்கள் உள்ளனர்.அவர்கள் மறுமுனைக்கு செல்வதற்கான விசா அனுமதிப் பத்திரங்களை கொண்டிருக்கவில்லை என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ட்ரோலர் படகு ஏற்கனவே, பயண ஆரம்பத்தின் போது தாமதித்ததாக கப்பல்துறை முகவர் ஜெஸ்மின் கெய்ரன் தெரிவித்துள்ளார்.

# மும்மொழிக்கொள்கை அமுலாக்கம் அனைவருக்கும் மகிழ்வான விடயம்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

மும்மொழிக்கொள்கையை நோக்கிச் செல்கின்ற இவ்வாறான நிகழ்வுகள் இங்கு நடைபொறுவதனையிட்டு நாம் சந்தோசம் கொள்ளமுடியும். மும்மொழிக்கொள்கை நோக்கிச் செல்லும் இலங்கை தேசத்தின் சமூகங்களுக்கிடையிலேயே ஒற்றுமையையும் மேம்பாட்டையும் ஏற்படுத்தவேண்டும். என்கின்ற இலக்கின் அடிப்படையிலே இரண்டு முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த அமைச்சின் ஊடாக பல்வேறு வகையான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்றுப்பிற்பகல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற வடமாகாண அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விவாதப்போட்டித் தொடரில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தேசிய மொழிக் கொள்கை சமூக ஒருமைப்பாடு ஆகிய இரு இலக்குகளை நோக்கியே தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு செயற்திட்டங்களை விடுத்துச் செயற்பட்டு வருகின்றது. இதில் பல விடயங்களில் முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு மிக முக்கியமான காரணம் மொழி என்று எடுத்துக் கொண்டால் மொழி அறிவை வளர்த்துக்கொள்வதன் மூலமே இந்த முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் எனவே அந்த அடிப்படையில்தான் மொழிக் கொள்கையையும் அதேபோல எங்களிடத்தில் ஒருமைப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொள்வதன் ஊடாக இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைத்து மக்களும் சமாதானமாக வாழக்கூடியதாக இருக்கும் என்ற திடமான நம்பிக்கையோடும் இன்று பல்வேறு வேலைத் திட்டங்களை அமைக்க மேற்கொண்டுவருகின்றது. அந்த அடிப்படையில்தான் இன்றைய நிகழ்வு நடைபெறுகின்றது. என்றார். (பா)

# இரசாயன ஆயுதங்களை படையினர் பயன்படுத்தவில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

வடக்கில் பயங்கரவாதத்தை முழுதாக தோற்கடித்த மனிதாபிமான நடவடிக்கையின் போது இரசாயன ஆயுதங்கள் உட்பட மரபல்லாத ஆயுதங்களை ஆயுதப்படைகள் பயன்படுத்தின என பல தரப்பினராலும் ஊடகங்கள் வழியே பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை ஆதாரமற்ற தவறான குற்றச்சாட்டுக் களாகும் என்று இராணுவப்பேச்சாளர் றொஹான வணிகசூரிய அறிவித்துள்ளார்.

இது தொடர்பில், பாதுகாப்பு தலைமை அதிகாரி அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக மரபு அல்லாத பல வழிகளில் இராணுவத்துக்கும் இலங்கை சிவிலியன்களுக்கும் எதிராக தாக்குதல்களை நடத்திய போதிலும் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது ஆயுதப் படைகள் குறைந்தபட்ச அளவிலான மரபு ரீதியான வழிகளை மட்டும் தேவையின் தன்மை கருதி பயன்படுத்தினர்.

கடந்தவருடம் செய்தது போன்றே நடக்கவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் அமர்வுகளை கருத்தில் கொண்டு ஆதாரமற்ற தீய நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க..

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன தொடர்பில் திருப்தி அடையாத காரணத்தினாலேயே அமெரிக்கா மூன்றாம் தடவையாகவும் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் நிறைவேற்ற ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தி இம்முறை தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என இலங்கை அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைப் பேரவை அமர்வுகளினால் ஏற்படக் கூடிய அழுத்தங்களை சமாளிக்கும் வகையில் பாரியள வில் இராஜதந்திர தந்திரோபாயங்களை அரசாங்கம் அமுல்படுத்திவருகிறது. இதன் ஓர் கட்டமாகவே ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளார். யுத்தத்தின் பின்னரான நாட்டின் அபிவிருத்தி குறித்து அமெரிக்க அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி, தீர்மானம் நிறைவேற்றும் திட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள லலித் வீரதுங்க முயற்சி எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுதந்திரதின விழா...

வகையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த சில வருடங்களாக தேசிய சுதந்திர தின விழா நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் கொண்டாடப்பட்டு வருவதாகவும் இம்முறை கேகாலையில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் திருகோணமலையில் சுதந்திர தினக் கொண்டாட்டம் இடம்பெற்ற வேளை சுமார் 25,000 பேர் கலந்து கொண்டதாக தெரிவித்த அமைச்சர், இம்முறை அதைவிட அதிகமானவர்கள் கலந்து கொள்வர் எனவும் கூறினார். சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு முன் தேசிய கீதத்தின் பெருமை, மதிப்பு குறித்து தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர தினத்தன்று கேகாலை மாவட்டத்தில் உள்ள ஐந்து மதஸ்தலங்களில் வழிபாடுகள் இடம்பெறும் எனவும் விசேட பிரமுகர்கள் 3000 பேர் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வர் எனவும் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார். கேகாலையில் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் 1400 தரைப்படையினர், 250 வான் படையினர், 250 கடற்படையினர், 250 பொலிஸார், 250 சிவில் படையினர், 768 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளதோடு 16 கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

### யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர் களை நிஷா தேசாய் சந்திக்கவுள்ளார்.

பின்னர் பெப்ரவரி 3ஆம் திகதி லண்டனுக்கு விஜயம் செய்யும் இவர், பிரித்தானிய அரசாங்க அதிகாரிகளுடன் இலங்கைக்கு எதிராக கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்து கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

### ரெலி மெயில்...

முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ரெலி மெயில் சேவையில் முதல் 10 வார்த்தைகளுக்கு 20 ரூபா அறவிடப்படுவதுடன் மேலதிகமான ஒரு வார்த்தைக்கு 1.50 ரூபா அறவிடப்படுகிறது. இதனைத் தவிர 10 ரூபா நிரந்தர கட்டணம் அறவிடப்படுவதுடன், விநியோக கட்டணமாக 15 ரூபா அறவிடப்படுகிறது.

தபால் திணைக்களம் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ரெலி மெயில் சேவையை இலவசமாக வழங்க தீர்மானித்துள்ளது.

### அமெரிக்கா அணுகுமுறை...

பிழையான முறையில் அணுகப்பட்டால் மீண்டும் வன்முறைகள் வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இலங்கைப் பிரச்சினைகளுக்கு அமெரிக்க மாதிரியிலான தீர்வுத் திட்டம் ஏற்புடையதல்ல எனவும், உள்நாட்டு ரீதியான பொறிமுறைமையே தீர்வினை எட்ட சரியான வழி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### இதுவரை...

வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண தலைமையில் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் சுமார் 2 மீற்றர் வரை அகலப்படுத்தப்பட்டு தோண்டப்பட்டது. இதேவேளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 4ஆவது நாளாகவும் நேற்று தமது விசாரணைகளை அங்கு முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பான இடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இன்றுவரை 16 பெட்டிகளில் 18 எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் இன்று மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த பணிகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குழந்தைகளை...

கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து அன்றைய தினமே மல்லாகம் சிறுவர் மற்றும் பெண்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

அதன்போது நீதவான் குறித்த பெண்ணை நேற்று விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன், அந்தப் பெண்ணின் 3 வயதுப் பெண் குழந்தையினை கைதடியிலுள்ள அரச சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் ஒப்படைக்குமாறும், மற்றைய ஒன்றரை வயது ஆண் குழந்தையினை பாட்டியின் சம்மதத்துடன் அவர் வைத்துப் பராமரிக்கவும் நீதவான் அனுமதி வழங்கினார்.

இந்நிலையில் மேற்படி வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட போது, மேற்படி பெண்ணை சிறைச்சாலை அதிகாரிகளின் உதவியுடன் மனநல சிகிச்சைக்கு உட்படுத்துமாறும், அத்துடன் அவரை எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# பருத்தித்துறைச் சந்தையின் அவலம்; தீர்வு இல்லாமல் நீடிக்கிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் கீழ் இயங்கும் பொதுச்சந்தை வியாபாரிகளின் இழுபறிநிலை நேற்றும் தொடர்ந்தது.

பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் தமது நியாயங்களையும், கஷ்டங்களையும் தெரிவித்து சந்தையின் கீழ்த்தளத்தில் வியாபாரம் செய்துவரும் நிலையில் தற்போது சந்தையின் துப்புரவாக்கும் செயற்பாடுகளையும் வியாபரிகளே மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நகரசபையினால் மரக்கறி வியாபாரிகளை மேல்தளத்திற்கு செல்லுமாறு தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டுவரும் நிலையில் வியாபாரிகள் கீழ்த்தளத்தில் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதன்னால் சந்தைப்பகுதியை துப்புரவாக்கும் நடவடிக்கையை நகரசபை மேற்கொள்ளாத நிலையில் மரக்கறி வியாபாரிகளே காலை வந்து தமது வியாபார இடத்தை துப்புரவு செய்து அதன் பின்னர் வியாபாரத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (109)

# கைத்தொழில் முதலீட்டுக்கு ஊக்குவிப்பு;

# முதலீட்டாளர்களுடன் ஆராய்வு



(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைத்தொழில்துறை முதலீட்டாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த கைத்தொழில்துறைகளை கைத்தொழிற்பேட்டைகளின் ஊடாக மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக துணி, பொலித்தீன், கைத்தறி உள்ளிட்ட மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகள் தொடர்பாக இதில் கவனம் செலுத்தப்பட்டது. இதனொரு அங்கமாக பள்ளேகல பகுதியில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டையின் ஊடாக உற்பத்திகளை மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் இதன்போது துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டதுடன், குறித்த தொழிற்துறைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உடனிருந்தார்.

# ரயில் நிலையத்தில் துர்நாற்றம் எத்தனை நாட்கள் சகிப்பது?

## பயணிகள் அவலம் நீடிக்கிறது

(கிளிநொச்சி)

சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த வருட இறுதியில் கிளிநொச்சி புகையிரத நிலையம் புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், அண்மையில் கட்டப்பட்ட இந்த புகையிரத நிலையத்தின் மலசல கூடங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் வீதிகளில் தேங்கி நிற்பதால் சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு வரும் உள்நாட்டு பயணிகள் மாத்திரமன்றி வெளிநாட்டுப் பயணிகளும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுவது பாராட்டத்தக்கது. ஆயினும், அதிக செலவில் நிர்மாணிக்கப்படும் இவ்வாறான புகையிரத நிலையங்களை பராமரிக்க வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பல்லவா?

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியும் இது வரை உரிய தீர்வு வழங்கப்படவில்லை என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒப்பந்தக்காரர்களின் தரக்குறைவான நிர்மாணம் மாத்திரமன்றி, அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் இதன் மூலம் புலனாகின்றது.

இவ்வாறான சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் அதிகாரிகள் விரைவில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே பயணிகளின் எதிர்பார்ப்பாகும்.

# கூட்டுறவுக்கடையில் திருட்டு

(கோப்பாய்)

யாழ். கோப்பாய் மத்தியிலுள்ள கூட்டுறவுச் சங்க நிலையமொன்றில் 45,000 ரூபா பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் சிவபாலன் சிவலிங்கத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

குறித்த நிலையத்தின் பின்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கிருந்த பால்மாக்கள், சவர்க்காரங்கள், டின் மீன்கள் மற்றும் குளிர்பானங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களே திருடிச்சென்றுள்ளதாக முறைப்பாட்டில் முகாமையாளர் கூறினார் எனத் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

# பருத்தித்துறையில் கரை ஒதுங்கிய மூங்கில் வீடு



(வடமராட்சி)

பருத்தித்துறை முனை கடற்கரைப்பகுதியில் மூங்கில் வீடு ஒன்று கரையொதுங்கியுள்ளது. நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இந்த வீடு 30 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்டதாகும்.

இந்த வீடு அறை மற்றும் படுக்கையறைகளைக்கொண்டதாகக் காணப்படுகிறது. இந்த மூங்கில் வீட்டினை பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# இன நல்லிணக்கத்தை நோக்கிய பயணம்



(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழிக்கொள்கை அதன் பாவனை மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட வடமாகாணத்தின் பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டித்தொடரில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுப்பிற்பகல் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, யாழ்.அரச அதிபர், மதகுருமார்கள், மற்றும் அதிதிகள் பலர் கலந்துகொண்டனர். மாணவர்களின் விவாத அரங்கமும் நடைபெற்றது.

# தப்பிச்சென்ற படையினருக்கு இனி இராணுவத்தில் இடமில்லை

(கொழும்பு)



இராணுவத்தில் இருந்து தப்பியோடிய படையினரை கைது செய்து அவர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் ஒழுக்க கட்டுப்பாடுகளை மீறி தப்பியோடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தப்பிச்சென்ற இராணுவத்தினர் கைது செய்யப்படுகின்றனர்.

கைது செய்யப்படும் நபர்களுக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பின்னர் அவர்களை இராணுவத்தில் மீண்டும் இணைத்துக் கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் இதுவரை தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இலங்கை இராணுவத்தில் இருந்து 30 ஆயிரம் பேர் தப்பிச் சென்றுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்திருந்த இராணுவப் பேச்சாளர், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக கூறியிருந்தார்.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(நாயினாதீவு)

நாயினாதீவில் உள்ள மூன்று பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வினை நயினாதீவு நாக விகாரையின் விகாரதிபதி ஏற்பாடு செய்திருந்தார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஸ்ட வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலை மாணவர்களுக்கே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. (21)


## வன்னி மாவட்டத்திற்கான பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

வன்னி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் பத்திரிகை விநியோகம் செய்யக்கூடியவர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

தகைமைகள் - 45 வயதிற்கு உட்பட்டவராக, உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர், (சாரதி அனுமதிப்பத்திரம்) உள்ளவர் தினமுரசு காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

விநியோக முகாமையாளர்,
'தினமுரசு' 373, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.